Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1. | 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (19-2-1949) விலை 1 அணா | குண்டு 20

"திராவிட முஸ்லீம்கள் திருந்துவார்களா?" தென்னாடு பொன்னாடு ஆகட்டும்

ஜே. எஸ். இப்ராஹீம்.

இந்துக்கள் எனப்படுபவர்கள் கோயில் குளம் தேர் திருவிழாப் போன்ற பல உற்சவங்களில் கலந்து தங்கள் பொருள்களையும், உடல் நலத்தையும் எப்படி இழக்கின்றார்களோ அதைவிட பலமடங்குகள் முஸ்லீம்கள் எனப்படுபவர்களும் இவ்விஷயத்தில் தங்கள் பொருள்களையும் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள் "உங்களுக்கு நாங்கள் சளைத்தவர்களல்ல" என்ற முறையில்.

பழனிமலைக் காவடி தூக்கி செல்லும் பச்சையப்பனைப் பார்த்து பரிகசிக்கும் பாச்சாமியான் அம்பராம்பாளையத்து அவுலியாவுக்கு கொடி தூக்கிச் செல்ல தயங்குவதில்லை.

அம்மன் கோயிலில் திருவிளக்குக்கு எண்ணெ ஊற்றப் போகும் அய்யாசாமியைக் கண்டு நகைக்கும் அப்துல் காதர் மசூதியிலிருக்கும் திருவிளக்கில் நெய்யை ஊற்ற அஞ்சுவதில்லை.

வெள்ள கோவிலுக்கு வெண்கலச் சிலை செய்து கொண்டுபோகும் வெங்கடாசலத்தைக் கண்டு நாணும் நயினா முகமது காதர் அவுலியா தர்காவுக்கு வெள்ளிக்கை செய்து கொண்டுபோக கூசுவதில்லை.

காட்டேரியான் கோவிலுக்கு தன் மனைவியைப் பிடித்திருக்கும் பேயை விரட்ட அழைத்துச் செல்கிறான் ஒரு கருப்புசாமி. அதே நேரத்தில் முத்துப்பேட்டை தர்காவுக்கு தன் மனைவியைப் பிடித்திருக்கும் சைத்தானை விரட்ட அழைத்துப் போகிறான் ஒரு முகமது உசேன்.

தேர் ஜோடித்து அதன் மீது காசு பணம் கோழி பழம் முதலியவற்றை வீசி தான் கோரும் பலன்கிட்ட முட்டாள் எண்ணம் வைக்கிறான் ஒரு இந்து. அதேபோல் சப்பரம் பல்லக்கு ஜோடித்து சந்தனக் குருசுகளில் தங்கள் பொருள்களை அனாவசியமாக அள்ளி வீசுகிறார்கள் முஸ்லீம்கள் மடத்தனமாக.

தேங்காய் பழம் சூடம் இவைகளை முக்கியமாக இந்துக்கள் கொண்டு செல்கிறார்கள் கோவிலுக்கு. சர்க்கரை கடலை ஊதுவத்தி இவைகளை முஸ்லீம்கள் கொண்டு செல்கிறார்கள் மசூதிக்கு.

நாமம் விபூதி இவைகளை இந்துக்கள் மூடநம்பிக்கையின் முத்திரையாக எவ்விதம் அணிகிறார்களோ அதே போன்று முஸ்லீம்களும் தாயீசு கருப்புக் கயிறு இவைகளை கழுத்திலும் கையிலும் அணிந்து கொள்கிறார்கள்.

இந்துக்கள் கலியாண காலங்களில் கொட்டு முழக்கு வாத்தியம் விருந்துகள் வைப்பதுபோல முஸ்லீம்களும் கொட்டு முழக்கு ஆடம்பர விருந்துகள் வைக்கிறார்கள்.

இந்துக்களைப் போன்று காது மூக்கு குத்துதல், வயதிற்கு வந்த பெண்களுக்கு சீர் சிறப்புகள் செய்தல் மற்றும் புண்ய ஸ்தலங்களுக்குப் போய் தங்கள் குழந்தைகளின் முடி (மயிர்) இறக்குதல் போன்ற மூடப் பழக்கங்களை முஸ்லீம்களும் குருட்டுத்தனமாக கையாண்டு வருகிறார்கள்.

இந்துக்களைவிட கேவலமாக பல ஜாதிப் பிரிவுகளையும் இன்றைய முஸ்லீம்கள் விரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இது போன்ற வேண்டாத காலத்திற்கேற்காத பலப் பல எண்ணங்களையும் கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் ஆதரித்தே வருகிறார்கள்.

இந்து சமூகத்தின் முரட்டு இரும்புப் பிடியிலிருந்து மீள மனிதன் தன்மானத்துடன் வாழ அன்று நபி பெருமான் அவர்கள் இஸ்லாமிய இயக்கத்தைத் தோற்றுவித்தார். ஆனால் இன்றைய முஸ்லீம்கள் நடத்தை எவ்விதமிருக்கிறது என்பதை நிதானமாக நடுநிலை நின்று சிந்தித்துப் பாருங்கள்.

இஸ்லாமிய இயக்கியம் உலகிற்கு உகந்தது தான் என்று உறுதி கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லீம்கள் பலப் பல அறிவற்ற மட்டரகமான மோசமான கீழ்த்தரமான பழக்க வழக்கங்களை கையாளுவது மிகமிக வருந்தத் தக்க விஷயமாகும்.

சுருக்கமாக இன்றைய முஸ்லீம்கள் இந்துக்களைவிட கேவலமாக, கலியாண காரியத்திலிருந்து கருமாதி விஷயம் வரை மூடச் சடங்குகள் புரிந்து வருவது உண்மை. இஸ்லாத்திற்கு விரோதமாகும்.

தென்னாட்டில் வாழும் ஒவ்வொரு முஸ்லீமும் தான் சுத்த திராவிடன் என்பதை உணரும் வரை தங்கள் மூடக் கொள்கைகளின் முரட்டுப் பிடியிலிருந்து மீள முடியாது என்பது உறுதி.

ஆதலின் உடனடியாக இன்றைய முஸ்லீம்கள் குறிப்பாக ஒவ்வொரு முஸ்லீம் வாலிபரும் தங்கள் முரட்டு மதவாதங்களை விட்டு இஸ்லாமிய இயக்கமும், திரரவிட இயக்கமும். உட்கருத்தில் ஒன்றுதான் என்பதை உணர்ந்து திராவிட சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கு பாடுபட முன்வர வேண்டும்.

தென்னாட்டு முஸ்லீம்கள் அனைவரும் உண்மையுணர்ந்து ஆக்க வேலைகளில் ஆர்வம் கொள்வரேயாயின் அதி விரைவில் தென்னாடு ஒரு பொன்னாடாக விளங்கும் என்பது திண்ணம்.

தவிர அன்று நபி பெருமான் விரும்பிய "மனிதன் மனிதனாக வாழ வேண்டும்" என்ற சீரிய தத்துவத்தை பூர்த்தி செய்வார்கள். இனிமேலாவது "திராவிட முஸ்லீம்கள்" திருந்துவார்களா?

இதுவும் நமது நிலையா?

பிச்சைக்குப் போனாலும் முகராசி வேண்டுமே. பிச்சையெடுத்து உண்பதும் பிறரை ஏமாற்றிப் பிழைப்பதும் திராவிடனுக்குப் புறம்பானவை. ஆனால் அரச மரத்தைப் பிடித்த பேய் ஆலமரத்தையுஞ் சேர்த்துப் பிடித்தாற் போலும்...

அழியட்டும் இந்துமதம்?

தா. பேட்டை. M. S. N. இராசன்

இந்து என்று சொல்லிக்கொள்ளும் ஏமாந்த தமிழனே வெட்கப்படவில்லையே நீ? இந்து உலகம் எப்போது உற்பத்தியாகியதோ அப்போதே. புனித (நச்சு) மதம் இந்து மதம் உண்டானது என்று வறட்டு வாதம் பேசும் இந்துமத கர்த்தாக்களே பாதுகாவலர்களே சாஸ்திரி-சர்மா-அய்யர், அய்யங்கார் - பண்டிதமணிகளே. உங்கள் மதத்தை எவ்வளவு பேர்கள் பின்பற்றுகின்றனர் - இடையில் ஏற்பட்ட மதத்தில் எவ்வளவுபேர் இருக்கின்றனர்? அண்மையில் தோன்றிய புத்த மதத்தினர் அறுபது கோடி பேர்கள். இடையில் தோன்றிய இயேசு கிறிஸ்து மதத்தில் ஐம்பது கோடி பேர்கள். நடுவில் தோன்றிய நபிநாயகம் இஸ்லாம் மதத்தில் ஏறக்குறைய நாற்பதுகோடி பேர்கள். போதுமா புள்ளி விபரம்? தேவையா திருக்கூட்ட பர பிர்மங்கட்கு. ஏன்? என்ற கேள்வியை எழுப்பத் துணிவில்லாத தமிழா' உன்னுடைய மதம்என்று உரிமை பாராட்டுகிறாயே! இந்துமதம்! அது அழுகிப் போன தத்துவங்களைக் கொண்டது. மக்களை பிளவுபடுத்தி பேதத்தை வளர்க்கும் கருவி. அதன் சுழலிலே சிக்கிசீரழியும் தமிழா சிந்தித்துப்பார். அது (இந்துமதம்) உன்னுடையதல்ல. ஆசியாவில் இருந்து குடியேறிய ஆரியர்களின் கூட்டுச்சரக்கு. மனு மாந்தாதாவைக் காட்டி மக்களை மடையர்களாக்கிய பார்ப்பனரின் விளை பொருள். நான்கு சாதி. பிறகு. நாலாயிரம் சாஸ்திரம். வேதம். என்னும் பெரும் மதிற்சுவர்கள் அறியாமை என்னும் கோட்டைகட்டி பயம் என்னும் அகிழ்வெட்டி தீண்டாமை என்னும் வேலி அமைத்து ஆள்கிறது ஆரியம். ஏமாந்த திராவிடா எழு விழி! தமிழனின் அறியாமையை முதலாக வைத்து ஆட்டிப்படைக்கும் ஆரியமே உன் முடிவுகாலம் நெருங்குகிறது. உன் மதிற்சுவர் கரைகிறது. அகிழ் தூர்த்தப்படுகிறது. நீ அறிந்து திருந்திக்கொள்வாய். முன்னொரு நாள் கூட நான் இந்துஎன்று கூறிக்கொள்ள பெருமையடைகிறேன் என்று கூறினாரே கோவைக்குமரன் ஆலை அரசன் ஆர். கே. சண்முகம். அவரைக்கூட ஆரியம். ஆழம்பார்த்துவிட்டது தேசியப் போர்வையில் தமிழனே இன்னும் எடுப்பார் கைப்பிள்ளையாய் இருக்கிறாய் ஆரியத்தைப்பார். புல்லைக்காட்டி பச்சை கூட அல்ல காய்ந்த புல்லைக் காட்டி உன்னிடம் கதை அளந்து உன் அறியாமையை விசாலமாக்கி எய்த்து எத்தர் வாழ்வு வாழ்வதை எண்ணிப்பார் என் அருமைக் காங்கிரஸ் திராவிடத் தோழனே நம் புத்துலக புதுமைக் கவி பாரதிதாசன் கூறுவதுபோல்

2-ம் பக்கம் பார்க்க.

1-ம் பக்கம் தொடர்ச்சி

தேன் சுரக்கப்பேசி இந்து தேசத்தை தின்னுதற்கு வான் சுரரை விட்டுவந்து பூசுரரும் வாழ்கின்றார் நயமொழிபேசி நம் மூதாதையர்களை எய்த்து பிழைத்தனர். இன்று கூட நீ அணுக்குண்டு யுகத்திலே ஆரியத்திற்கு அடிவருடும் தமிழா. உன் தாழ்நிலையையும். நீ ஆரியத்தின் அணைப்பிலே மறந்து விட்டிருக்கிறாய். பண்டைய தமிழன் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். என்ற உயர்ந்த பண்போடு வாழ்ந்தான். இமயம்வரை சென்று புலி. வில் கயல் பொரித்த தமிழ்க் கொடியை நாட்டினான் வீரத்தோடு வாழ்ந்த தமிழனின் வழித்தோன்றலாகிய நீ. கோழையாய் விட்டாய். பார்ப்பனரின் பசப்பு மொழிகளை நம்பி பல கடவுள்களை நம்பி பராரியானாய். இமயம் வரை நீ ஆளாவிடினும் உன்நாடு. பொன்னாடு தமிழ்நாடு! தனியாட்சி பெற பாடுபடு. வடவனுக்கும் ஆரியனுக்கும் தாசானு தாசனாய் டில்லி தேவதையை நோக்கும் தேசீயத் தோழனே சிந்தித்துப்பார். தமிழன் கலை சங்க இலக்கியம் உலகப்பொதுமறை என்று பல நாட்டு அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் நீதி நூல் குறளை மறந்து மதி தடுமாறும் மறத்தமிழா இராம காதை பாரதம் பகவத்கீதையிலே ஆரியர்களின் கலையிலே அறிவை செலுத்தி அல்லற்பட்டு சொந்தநாட்டவனை உடன் பிறந்தானை உன்னினத்தானை தமிழனை திராவிடனைக் கண்டால் தூரவிலகும் வரையில் உன் உள்ளத்தில் துரும்பேறியிருக்கிறது. இவையாவும் இந்துமதத்தின் விளைவு ஆரியக் கூட்டுறவின் ஆபத்து! இன்றையத் தேசீயத் தோழர்கள் 100-க்கு 99-பேர் தீண்டாமை என்னும் கொடிய நோய் பீடிக்கப் பட்டுள்ளனர். மறுக்க முடியுமா? மேடை பேச்சு நடைமுறைக்கு ஒத்து வரவில்லையே தோழனே? எடுத்துக்காட்டாக என் அனுபவத்தைக்கூற ஆசையுறுகிறேன். எங்களூரில். ஆகஸ்ட் சுதந்திர தினத்தில் நள்ளிரவில் 12-மணிக்கு சாஸ்திர சம்பத்துடன் வாங்கப்பட்ட அந்நாள் ஆரியம். அரியனை ஏறியநாள்தான் தேசீயத் தோழனின் காபி கிளப்பில் ஏழைகள் இந்நாட்டின் முதுகெலும்புகள் உழைப்பின் உருவங்கள் நடமாடும் மனிதர்கள் நமது அருமை ஆதிதிராவிடர்கள் உள்ளே விடப்பட்டதில் ஏற்பட்ட விளைவு. எந்த காங்கிரஸ் இயக்கத்திலே ஈடுபட்டு பணிபுரிகிறார்களோ அதே தோழர்கள் திராவிடத் தேசீயத் தோழன் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்த கடையில் நாம் சாப்பிடுவதா? என்றுவெறுத்தனர்கள். என்னே வெளிவேசம்! தூயகதர் அணியும் தோழர்கள் உள்ளத்தில் தூய்மை இல்லையே பிறகு ஆரியரால் புரோகிதம் செய்து புது விழா நடத்தினர். என்னேஇந்து மதத்தின் கொடுமை ஆரியத்தின் சூழ்ச்சி. இந்த இந்து மதம் உள்ளவறை மனிதன் முன்னேற வழியுண்டா? சிந்தித்துப்பார். தேசீயத் திராவிடத் தோழனே? மற்றோர் நிகழ்ச்சி. அண்ணாவின் சொல்லோவியத்தின் மறுபதிப்பு எழுத்தோவிய திராவிட நாட்டிலே படித்திருப்பீர்கள் சட்டசபைக்கு தலைவராய் வீற்றிருந்த நாளிலே மந்திரி சபையை அலங்கரித்து வீற்றிருந்த ஆதிதிராவிடர்கள் காலத்திலே மதுரையிலே இடுகாட்டில்கூட பேதம் தலைவிரித்தாடியது. நாட்டிலே நச்சரவங்களின் தொல்லை இடுகாட்டில்கூட விடவில்லையே இந்துமதம் என்னும் நச்சரவு எப்படி வளர்ந்து வளம்பெற்று வாழமுடியும்? இந்துமதம் ?மற்றமதம் என் வளர்ச்சியடையாது? சிந்தித்தாயா தேசீயத்தோழனே என்று துமதம் ஒழிக்கப்பட்டு நாட்டில் அன்பு மதம் தழைக்கிறதோ அன்றுதான் விடுதலைநாள் இந்த நாட்டுமக்கள் அன்றுதான் சுதந்திரமக்கள். எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்காட்டலாம் எட்டில் எழுத இடமில்லை. நாட்டில் அவ்வளவு கேடு விளைந்துள்ளது.

இன்று இந்துமத திருத்த மசோதா கொண்டு வருவதற்கு அக்கிரகார வாசிகளின் கடும்எதிர்ப்பு வைத்தியனாதய்யர் சல்லடம் கட்டி சமர்புரிகிறார். சத்தியானந்த சரஸ்வதியின் பட்டினி மிரட்டல். ஆரிய ஏடுகள் படம்போட்டு முதலிடம் அளிக்கின்றன. இந்துமதத்தில் கைவைக்காதே என்று பார்ப்பனர் கூச்சலிடுகின்றனர். என் இந்தஎதிர்ப்பு அவர்களின் வாழ்வு அதனுடன் பிணைக்கப் பட்டிருக்கிறது. நீ வி வேடம் போடும் கோட்சே இனம். இந்துமதம் ஒழிக்கப்பட்டால் மக்களை ஏமாற்ற முடியாது. உல்லாச வாழ்வு உழைக்காமல் வாழ முடியாது. இந்நாட்டில் இந்துமதம் உள்ளவரை பொது உடமை பரவமுடியாது. வேண்டுமானால் திராவிட நாட்டில தழைக்கும் அப்பணி புரிந்துவரும் நமக்கு எதிர்ப்பு. பல பக்கங்களிலும் தாக்குதல். சனாதனம் சீறுகிறது நமது வளர்ச்சியைக்கண்டு. ஆரியம் அதறுகிறது நமக்கு மக்கள்காட்டும் ஆதரவைக் கண்டு சர்க்கார் மிரள்கிறது 144 கலை அள்ளிவீகி மலபார்போலீஸ் தயவை நாடும் அளவுக்கு நமது கழகம் பலம்பெற்று விட்டது காஞ்சீபுரத்திலேயிருந்து கிளம்பிய தனிமனிதர் பெரியார் இன்று திராவிடநாட்டின் ஒப்பற்ற தலைவர் பெரியார் ஈ வெ ராமசாமி என்று ஆயிரமாயிரம் காளைகளின் இடிமுழக்கம் கேட்டு இந்துமதம் ஆட்டம் கொடுக்கிறது: மடிசஞ்சி வைத்தியனாதய்யரும்-- வரதாச்சாரியும் முட்டுக் கொடுத்துப் பார்க்கின்றனர் வீண்வேலை புரிகின்றனர். இந்துமதம். போன்ற நச்சுமதம் இனி நாட்டிற்கு தேவையில்லை. ஆயிரமாயிரம் காளைகள் கூடிய ஈரோட்டு மாநாட்டுக்கு இருட்டடிப்பு. ஆனல் சென்னையில் 15 லட்சம் ரூ சொத்துள்ள பட்டினிச்சாமிக்கு இரவில் பால்குடிக்கும். பகல் வேசதாரிக்கு சுயசாதி மித்திரனில் போட்டோவுடன் நாள் தவறாமல் செய்தி. நீதிகோறும் தேசீயத்தோழனே! இன்னுமா உனக்கு காங்கிரஸ் பற்று? வெளியில்வா தோழனே தன்மான இயக்கத்தோடு கலந்து பணியாற்று உன் உரிமைகூட. இதே நேரத்தில் ஆரியமே உனக்கும் ஒரு எச்சரிக்கை. சூறாவளி காற்றுடன் மோதும் சிறு துரும்பே அலைகடலை அடக்க நினைக்கிறாய். செல்லாது கோட்சே இனக்குள்ள நரிச்செயல் மனிதனை வாழ ஆசைப்படு. ஆண்டவன் பிரதிநிதி என்று கிழிந்த பஞ்சாங்கத்தைக் காட்டி மிரட்டாதே. அறிவோடு கலந்துவாழு புளுகு மூட்டைகளைக்காட்டி மோட்சலோகத்தின் அனுமதி' சீட்டு என்று ஏமாந்த தமிழனை இனியும் எய்க்காதே அன்பே கடவுளாகவும் அறிவே மதமாகவும் இருக்க பாடுபடு. புரியாத மொழிபேசி கண்டவற்றைக் கடவுள் என்று கூறி இனஒற்றுமை (தமிழன்) யைகுலைக்காதே அழியட்டும் இந்து மதம். ஒழியட்டும் மௌடிகம் தோன்றட்டும் புத்தறிவு மலரட்டும் புதுவாழ்வு புன்மை அழியட்டும். மனிதன் மனிதனாக வாழட்டும். மடாதிபதிகள் ஒழியட்டும். மக்கள் வாழட்டும,

'வாழ்க வாழ்கவே' வளமார் எமது திராவிடநாடு
'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழெ'ன்று முழக்கிடு தோழனே'

"'வணக்கம்'"

தம்மை மறந்தியங்கும் தமிழர்களே - சிந்திப்பீர்!

தில்லைக்கலைமணி

கதிரவனோ குணக்கடலில் கடுகி வீழ்ந்தான்
காரிருள் வையத்தை மென்று தின்றது,
எங்கெங்கு நோக்கினும் இருள், இருள்:
எதிரெதிரே போவார் முகம் தெரியவில்லை.

ஊர் கோடிச் சாவடியில் ஒரு சிலர்
ஊமையர் போல் வீற்றிருந்தார் தடியுடனே
சதிகார அக்கும்பல் யார் வரவையோ
பழிவாங்கும் எண்ணத்துடன் பார்த்திருந்தார்

கருஞ்சட்டைத் தோழர்கள் குளத்துமேட்டில்
'கர்ச்சிக்கும்' பகுத்தறிவுப் பொன்மொழிகள்
தென்றலிலே கலந்துவந்து ஊரெங்கும்
தெளிவாகக் கேட்டன மணிகள் போல,

கூட்டம் முடிந்தது. கருஞ்சட்டைத் தோழர்கள்
வீட்டுக்கு நடந்தனர் வேகத்துடனே,
பாதையின் நடுவே பாதகனொருவன்
படுத்திருந்தான் சவப்போல் பாசாங்காக

பாதையிலே அவனைக்கண்ட நம் தோழர்கள்
பரிவுடனே குனிந்தவனைப் பார்க்கும் போது
பதுங்கியிருந்த 'குண்டர் குழாம், பெருந்தடியால்
பச்சாத்தாப மில்லாமலே அடிக்கலுற்றார்

அடிபடும் நேரத்திலும் தோழர்கள் அலறினரா
அல்லது 'அப்பா அம்மா' என்றுதான் கத்தினரா
இல்லை! இல்லை!! "எம் தமிழ் வாழ்க"!
இந்தி ஒழிக'! 'இன்பத்திராவிடமே வெல்க' என்றே,

மரணத்தின் வாயிலிலும் 'இதைத்தானே'
மறத்தமிழன் பாடலானான் உயிரை மறந்து.
அடித்திடும் தோழர்கள் இதனைக் கண்டார்
'ஆகா, ஆகா' இது என்னே உறுதி யென்றார்.

துடுக்கினாலே நாங்களாக இதைச்செய்யவில்லை
தூண்டிவிட்டார் பண்ணையாளர் பணத்தைக்காட்டி
இனி நாங்கள் உங்கள் பக்கம், உணர்ந்து விட்டோம்
என்று கூறி 'தோழர்களை தூக்கிச் சென்றார்

அடிப்பட்ட இடங்களுக்கு மருந்திட்டுக்கட்டி
அறியாது செய்திட்டோம் 'மன்னிக்க' என்றனர்.
நம் தோழர்கள் அவர்களைத் தழுவி யணைத்து
நல்லதப்பா பரவாயில்லை என்றே நவின்றார்.

பொது மக்கள் புரண்டெழுந்து ஒருங்கே கூடி
பொறுமையுரு பண்ணையாளன் வாயில் வந்தார்
சங்கதியைத் தெரிந்துக்கொண்ட பண்ணையாளன்
சடுதியிலே தன்னுயிரை மாய்த்துக்கொண்டான்

ஏனிந்த நிலையென்று இதயம் கேட்கிறது
என்ன பதில் கூறுவது சற்றே சொல்வீர்
தம்மை மறந்து இயங்குகின்ற தமிழருக்கே
சமர்ப்பணம்' செய்கின்றேன். சிந்திப்பீரே.

இராணிப் பேட்டையில் திராவிடக் கழகக் கூட்டம்,

——: (x) :——

12.2.48ல் மாலை 5 மணிக்கு இராணிப்பேட்டை சந்தை மைதானத்தில் நவல்பூர் திராவிட கழக சார்பாக பொதுக் கூட்டம் நடைப்பெற்றது. அதுசமயம் நவல்பூர் திராவிட கழக சார்பாக தோழர் அர்ச்சுணனை கூட்டத்திற்கு தலைமை தாங்கும்படி பிரேரேபிக்க. ஆற்காடு திராவிட கழக சார்பாக கழக செயலாளர் தோழர் இளங்குப்பன் அவர்கள் அமோதிக்க தலைவர் பணியை ஏற்று முன்னுரையில் திராவிட தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைப் பேசக் கேட்க நீண்ட கரகோஷத்திற்கிடையேயும் பல கழக தோழர்கள் மலர் மாலை அணிவித்தும் வரவேற்புதாள் வாசித்தபின் உணர்ச்சி ததும்ப 3-30 மணி நேரமாக கழக கொள்கைகளை வெகு விரிவாகவும் தற்போது மதம் என்னும் பேரால் அக்ரமங்கள் நடந்து வருவவதைப் பற்றியும் கண்டித்து சிறந்த சொற்பொழிவு ஆற்றி தலைவர் நன்றியுடன் இரவு 10க்கு இனிதே கூட்டம் முடிவுற்றது.

வரவேற்பு தாள் கழக தோழர்கள் மறந்துவிட்டனரோ என்னவோ தெரியவில்லை பல தோழர்களில் ஒருவருக்காவது டீ தாள் கிடைக்காமையைப் பற்றி அல்ல கொடுக்காமைப் பற்றி வருத்தமுடன் திரும்பிச் சென்றார்கள்.

(ஒ. நி.)

மாணவர்களுக்கு!

தி. வ. அண்ணாமலை.

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே நம்முடைய தாயகம் — தமிழகம் ஏனைய நாடுகளை விட எத்துறையிலும் மேம்பட்டே விளங்கியதென்பது வரலாற்று வல்லுனர்களின் முடிவு.

வற்றாத நதிகளும் வளமுள்ள சாலைகளும் சோலைகளும் எழில்மிகு குன்றுகளும் இயற்கை காடுகளும் தங்க வயலெனத் தகு நிலமும் முப்புறங் கடலும் ஒரு புறம் மலையும் தமிழகத்தின் இயற்கை எழிலாகத் திகழ்ந்தது.

முடியுடை மூவேந்தர்கள் அறநெறி தவறாது ஆட்சி புரிந்தனரென்பதும், சேரன் செங்குட்டுவனென்பான் இமயத்தின் பிடரியில் விற்கொடி பொறித்துத் தன்னையிகழ்ந்துரைத்த கனக விசயர்களாகிய ஆரிய மன்னர்களைப் புறங்கண்டு அவர்களின் தலையிலே கல் சுமத்தி கண்ணகிச் சிலையமைத்தனவென்பதும், கடல் கடந்தும் பகைவரையழித்து பண்புடன் வாழ்ந்தனரென்பதும், பொன்னும் மணியும் நறுமணப் பொருள்களுங் கொண்டு சாம்ராஜ்யங்களுடன் வாணிபம் நடாத்தினரென்பதும், யாதும் ஊரே யாவருங் கேளீர், தமிழர் அனைவருந் தமிழ்த்தாய் மைந்தர் எம்மதமாயினும் எக்குலமாயினும்—எங்கள் தமிழர் எங்கள் தமிழர்'' என வளமுடன் வாழ்ந்தனரென்பதும் தமிழர்கள் அரசியல் பொருளியல், சமூகயியல் ஆகிய வற்றில் தழைத்திருந்தனர் என்பதை யன்றோ விளக்குகிறது.

தமிழை வளர்க்கும் சங்கமொன்று சிங்கப் புலவர்களை கொண்டமைத்து இலக்கியம் பூங்காவிலே உலவின ரென்றால்—அந்தப் பூங்காவிலே திருக்குறளும், நற்றிணையும் நல்ல குறுந்தொகையும், நல்காப்புகழ்பெற்ற தொல்காப்பியமும் பூத்ததென்றால் அது தமிழர் தம் தாய் மொழிப்பற்று தானே என விளக்குகிறது.

அரசன் அவைக்களத்தேறி அஞ்சாது இடித்துரைத்து அவன் தவறை உணரச் செய்த கண்ணகி காதையும், அன்னோரின் அறவுரை கேட்ட ஞான்றே உயிர் துறந்த தலைவனைக் கண்டு தானும் உயிர்நீத்த சோப்பெருந் தேவியின் செயலும்' அறவனடியினை மறவாத் துறவினைக் கொண்ட மணிமேகலையின் சரிதையும் மறப் பெண்டிர் தம் மாண்பினையன்றோ உணர்த்துகிறது?

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு இமயமுதல் கன்னியீறுக உள்ள நிலப்பரப்பினை யன்றி கடல் கடந்தும் தங்கள் ஆற்றலைக் காட்டி வந்த நாடு இன்று தனக்கென ஓர் எல்லைக் கோடின்றி தவிக்கின்றது. தற்போது தலை நிமிர்ந்து நிற்கும் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னரே இலக்கியச் சிறப்புற்றிருந்த இன்பத்தமிழ் இன்று அரசியல் முதலிய எத்துறையிலும் வெறுக்கப் படுவதல்லாமல் தமிழ் மக்களாலேயே புறக்கணிக்கப் பட்டும் வருகிறது. நாட்டிற்கும் மொழிக்கும் நற்பணி செய்து கிடப்பதே தம் கடமையென வாழ்ந்த புலவ பெரு மக்கள் நடமாடிய நாட்டிலே இன்று தனக்கென வாழாத்தகைமை சால் புலவர் ஒருவரைக் காண்பதும் அரிதாகி விட்டது. தொல்காப்பியமும் திருக்குறளும் நாலடியாரும் உலவிய நாட்டிலே இன்று கீதையன்றோ புகுந்து விட்டது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் நிலவிய நாட்டிலே இன்று இந்தி மொழியன்றோ புகுத்தப்படுகிறது. கைத் தொழிலும் வாணிபமும் கவர்ச்சிமிகு சித்திரமும் கலைகளும் கற்றறிந்த தமிழர் இன்று வடவரை யன்றோ பூசிக்கின்றனர். பட்டாடையும் பருத்தியாடையும் நெய்து சீனம் யவனம் கடாரம் ரோம் போன்ற அயல் நாடுகளுக்கு கட்டு கட்டாய் அனுப்பிய தமிழன் இன்று கட்டத் துணியின்றி யன்றோ கலங்குகின்றான். ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற நன்னெறியினை கடைபிடித்த தமிழன் இன்று ஆயிரமாயிரம் பிளவுகளையல்லவோ கொண்டிருக்கின்றான். மானிலத் தோழர்களே! இந்த நிலையெய்தாலாமா தாய்நாட்டிற்கு? பண்டைச்சிறப்பினையும் இன்றைய இழிவினையும் கண்டும் அனுபவித்தும் வருகின்ற நமக்கு உணர்ச்சி உந்தவேண்டாமா? அன்னியன் ஆதிக்கத்தை அகற்ற அறப்போர் தொடுக்க வேண்டாமா? அன்னையாம் தமிழுக்குற்ற இடுக்கண் களைய வேண்டாமா? தமிழன் சிறப்பை தரணிக்கெடுத்து ஓதவேண்டாமா? தனி அரசு காணவேண்டாமா? தன்னிகரற்று வாழவேண்டாமா? இன்று உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் மாணவ மணிகளாலேயே முன்னேறுகிற தென்பதை உணர்ந்து வரும் நாம் நம்முடைய நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டாமா?

ரஷ்யநாட்டிலே கோடுங்கோலன் "சார்" ஆட்சியை வீழ்த்த லெனின் தோன்றி மாணவர்களைப் பக்குவப் படுத்தி வீழ்த்தினன் மன்னராட்சியை. சீன நாட்டிலே சன்யாட்சன் தோன்ற மடமையில் மதியிழந்து உழன்ற மக்களை மானிலர்களை ஆயுதமாகக் கொண்டு புரட்சிக்கருத்துக்களைப் பரப்பி வெற்றி கண்டான். பிரஞ்சு நாட்டிலே ரூசோ மாணவர்களை ஏவி புரட்சி கண்டான்; புதுமை புரி அமைத்தான். அதுபோல இந்நாடும் நாட்டு மக்களும் நலம் பெற மாணவர்களே பேருதவி புரிந்தனர் என்று வருங்கால வரலாற்றிலே வரையவேண்டாமா?

ஏறக்குறைய 5 கோடி மக்களும் நல் வாழ்வு நடத்தவேண்டும் என்று — ரஷ்யநாட்டிற்காக ஒரு லெனின் உழைத்ததைப்போல, சீனநாட்டிற்காக ஒரு சன்யாட்சன் தோன்றியதைப்போல, பிரஞ்சு நாட்டிற்காக ஒரு ரூசோ உதித்ததைப்போல—இந்த நாட்டிற்காக ஒரு பெரியார் ராமசாமி உழைக்கிறார் என்றால் அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்நாட்டு மாணவர்கள் செல்லவேண்டாமா? தமிழகம் தழைப்பதற்காக, தமிழர்கள் தலைநிமிர்ந்து நடப்பதற்காக, உலக முன்னணியிலே ஏனைய நாடுகளைப்போல மிளிர்வதற்காக அந்த ஈரோட்டுச் சிங்கம்—மாவீரர் பெரியார் அமைத்திருக்கும் பகுத்தறிவுப் பாதையில் விரைந்து முன்னேற வேண்டாமா? பாதை சற்று கரடுமுரடானதாக்கூட காணலாம். ஈராயிரம்ஆண்டுகளாகக் கவனிப்பாறற்றுக் கிடந்த பாதை வைதீகமுட் புதர்களும், சனாதனச் சாக்கடைகளும், பார்ப்பனீயப் படுகுழிகளும், ஆரிய நச்சரவங்களும், அந்த நச்சரவங்கள் உமிழ்ந்த இந்து மதமென்னும் விட ஊற்றும், அந்தவிட ஊற்றிலிருந்து உற்பத்தியான சாதிமத பேதமென்றும் விடக்கிருமிகளுங்கூட நிறைந்துள்ள பாதைதான். பாதையின் தன்மை பயங்கரமானதாயினுங்கூட நம்மிடம் பகுத்தறிவென்னும் ஆயுதம் உள்ள வரையில் அலைகள் நெருங்காது. எந்த நருலட்சியத்திற்கும் கஷ்ட நஷ்டமென்னும் விலை கொடுத்தே தீரவேண்டுமென்றும் அந்த அறிவின் சிகரத்தின அறிவுரையை நெஞ்சத்தி லிருத்தியே நாம் பாடுபடவேண்டும். நமது இலட்சியம் இன்பத் தமிழகம்—திராவிடம்; அதனை யெய்த யெவ்வித தியாகத்திற்கும் தயாராகவேண்டும். குமரன்களைப்போல தடியடி தாங்கவும், பகவத்சிங்குகளைப்போல தூக்கு மேடை ஏறவும், தாலமுத்து நடராசன்களைப்போல சிறையிலே மாண்டு மடியவும், வேலாயுதங்களைப் போல கோரக்கொலைகளை வரவேற்கவும் நெஞ்சுறுதி வேண்டும். அத்தகைய அசைக்க முடியாத உறுதி கொண்டாலொழிய திராவிடத்தை சுரண்டி வரும் ஆரியத்தையும், வடநாட்டையும், வெளியேற்ற முடியாது. வெளியேற்றினாலொழிய இன்ப புரியெய்த முடியாது.

எனவே, மானிலத் தோழர்களே! பழமையைசாடுங்கள்! பகுத்தறிவைக் கொள்ளுங்கள்! அதோ! புரட்சி புரியிலே நின்று பாரதிதாசன் உங்களைப்பார்த்து கூறுகின்றார்; புதியதோர் உலகு செய்ய, கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்க்க, பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்க்க புனிதமோடதைஎமது யிரெனக் காக்க, இதுஎனதென்னுமோர் கொடுமையை தவிர்க்க, திராவிட நாட்டை திராவிடருக்காகசிங்கமென்ற இளங்காளைகளே—மிக்க தீரங்கோள்வீர் நாட்டினிலே'' என்று தீவிரங்கொள்வீர்களா? பதில் வேண்டும் செயலில்.

பொருளனைத்தும் பகிர்வோம் வாரீர்!

க. மாணிக்க வாசகன்

வேளாண்மை பெருகுதற்கு வழியைக் காணோம்
வெயலிலே பனிபோல ஏழை மக்கள்
தாளாமல் பசிக்கொடுமை தவிக்குங் காலை
தண்ணீர்போல் அழிகிறது, பணமோர் பக்கம்!

காளான்கள் போல்பூத்து கருப்பு மார்க்கட
கழுகென்று கொத்துகிறார் ஏழை மீது!
வாளாகும் ஏழைகண்ணீர் எனத்தெ ரிந்தும்
வாலாட்டு கின்றாலோ முதலா ளித்தான்!

நாடுநம தென்றவருக்கு நரியும் சாதி
நாற்றத்தை பிடுங்கெறிய மனந்தான் இல்லை!
மூடுமந்த ரக்கோயில் மூலத்திற்கு
மூடனேறும் பார்ப்பனனே தகுதி என்று

பாடுபடு கின்றாரே திராவி டத்தார்
பதைக்குதடா இவர்செயல்கள்! பார்ப்பான் தன்னை
தேடுகின்றார் திருமணத்தில்! அவனும் வந்தால்
தேவடியாள் மகனென்று திட்டு கின்றான்!

மடங்களில் கோவில்களில் திருட்டு, மோசம்
மலிகிறது எனக்கண்ட அரசாங் கத்தார்
தொடங்கினார் சிறுமாற்றம்! துள்ளிப் பார்ப்பான்
தொந்தியினி பெருக்காதே என்று எண்ணி

அடம்பண்ணி கடற்கரையில் வந்து உண்ணும்
ஆச்சரிய விரதத்தை மேற்கொண் டார்கள்!
நடமாடும் சாமிகளே! ஆரி யத்தீர்
நரிக்குணத்தை விட்டு மக்கள் நலனைக் காப்பீர்!

வாரீர்யென் தமிழ்க் குடியில் பிறந்த மக்காள்
வளைத்தொடிப்போம் சாதியெனும் இரும்புப் [பூட்டை
தாரீரோ உறுதிமொழி தமிழர் யாரும்
தாழ்வுயர்வு மனப்பான்மை விடுவோம் வாரீர்!

பாரீரோ மேல்நாட்டார் முன்னேற் றத்தை
படுத்துறங்கும் தமிழ்நாட்டீர் விழிப்பீர் இன்றே!
யாரீரிப் பணக்காரன் எனவும் கேட்டு
எல்லோருக்கும் பொருளனைத்தும் பகிர்வோம் வாரீர்!

ஏஜண்டுகள் தேவை.

சென்னை நகரிலும் இதர எல்லா முக்கிய ஊர்களிலும் "உடுமலை பீரங்கி"க்கு விளம்பரங்கள் சேகரிக்க நம்பிக்கையான ஏஜண்டுகள் உடனே தேவை. விவரங்கட்கு எழுதவும்.

நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை | சனி | 19-2-49

தமிழே தேவை

இசைக் கருவிகளில் கீழானது ஹார்மோனியம். இதற்கு மொட்டை வாத்தியம் என்றும் சொல்வதுண்டு.

ரீங்கார சப்தம் இல்லாததாலும், கமகங்கள் அனுசுரங்கள் முதலியவைகள் சாதாரணமாக வாசிக்க முடியாமையாலும், "தொட்டால் பேசும் விட்டால் அவ்வளவுதான்" என்ற அளவில் இதற்கு" மொட்டை வாத்தியம்" என்றே பகர்வர் பாடகர்கள்.

மொட்டை வாத்தியமாயிருந்தாலும் இதற்கு மற்ற எந்த இசைக் கருவிக்கும் இல்லாத ஒரு தனி விசேஷமும் உண்டு அதற்கு தனிப் பட்ட பட்டமும் உண்டு.

"ஹார்மோனியம்;' ஒரு சிறந்த இசை ஆசிரியன், அதாவது ஆசான் இல்லாதபடியே சுருதிலயம் ஏற்படுத்திக் கொடுப்பதில், பழக்கப்படுத்திக் கொடுப்பதில் ஹார்மோனியத்திற்கு சமமான கருவி வேறொன்றுமில்லை யென்றே சொல்லிவிடலாம்.

அதனால் இந்த ஹார்மோனிய உதவியைக்கொண்டு சுருதிலயம் ஏற்பட்டபின் வேறெந்த கருவியையும் சுருதி விலகாமல், சுருதியை யொட்டி, உபயோகிப்பது சிரமமாகாது. சற்று கவனமும் பழக்கமுமே தேவை.

இதைக்கொண்டு ஒருவனுக்கு அறிவு என்பது எவ்வகையிலேனும் ஏற்பட்டுவிடின் அவ்வறிவைக் கொண்டு ஒவ்வொருவனும், அவ்வப்போதைய அவசியத்திற்குத் தகுந்தாற்போல், அறிவை வளர்ச்சி செய்து கொள்கிறான். காலத்தை வெல்கிறான்.

ஆரம்ப அறிவுபெற வேண்டியிருந்த, எடுத்துக் கொண்ட "சிரமம்" பிற்காலத்தில் "சிரமம்" என்பது மாறி தேவைக்குத் தகுந்த வண்ணம் தம்மை அமைத்துக் கொள்ள வேண்டிய ஒரு சாதாரண, எளிதில் ஆகக் கூடிய, செய்யக்கூடிய, சாதிக்கக் கூடிய காரியமாகவே ஏற்பட்டு விடுகிறது.

அதுபோல் நம் தமிழ் நாட்டில், நாம் புழங்கக் கூடிய, பேசக்கூடிய, சீக்கிரமே கற்றுக் கொள்ளக்கூடிய நம் தாய் மொழியாகிய தமிழையே ஆரம்பத்துக்குக் கற்றுக்கொண்டால், பிற்காலத்தில் தேவைக்குத் தகுந்த வண்ணம் எத்தனை பாஷைகளும் கற்றுக்கொள்ளலாம்.

தமிழுக்கு, மற்றெந்த பாஷைக்குமில்லாத ஒரு தனிச் சிறப்புமுண்டு.

ஒரு தமிழன்—அதாவது தமிழை பேசுபவன்-அதாவது எவன் ஒருவன் தமிழைக் கற்றறிந்திருக்கிறானோ அவன் பிற எப்பாஷையையும், சீக்கிரமே கற்றுக் கொள்ள முடியும். நல்ல வண்ணம் பேசவும் முடியும், எழுதவும் முடியும்.

எவ்வெந்த ஊரிலே தமிழன் குடியேறியிருக்கிறானோ அவ்வந்த ஊரின், மக்களின் பாஷையை அவ்வூராருக்கு எவ்விதத்தும் சளைக்காமல் அவ்வூராரைப் போலவே பேசி வருகிறான்.

ஆனால் பிற பாஷைகளைக் கொண்டவர் தமிழ்நாட்டில் எத்தனை காலம் குடியிருந்தாலும் தமிழை, ஒரு அளவுக்கு, ஏதோ ஒருவகையில், பேசமுடிகிறதே தவிர சரியான உச்சரிப்புடன் பேச முடிவதில்லை.

பிற பாஷைகளைக் கொண்டவர்கள் இதை ஆக்ஷேபிக்கலாமாயினும் பிறர் தமிழை எவ்வண்ணம் பேச முடிகிறதோ அதைக் காட்டிலும் பன்மடங்கு அழகாகவும், சரியான உச்சரிப்புடனும், தங்கு தடையின்றியும், மிக எளிதில் தமிழன் பிற பாஷைகளைக் கற்றுக் கொள்கிறான், பேசவும் செய்கிறான் என்பதை மறுக்க எவராலும் முடியாது.

இதற்குக் காரணம் தமிழ் பாஷையின் அமைப்பும், இலக்கிய இலக்கண சிறப்பும் நடையின் வளப்பமுமேயாகும் சுருங்கச் சொல்லுமிடத்து.

சாதாரண மொட்டை வாத்தியமென அலக்ஷியமாகப் பேசப்படும் "ஹார்மோனிய"த்தைக் கற்றுக் கொண்டாலே பிற எந்த இசைக் கருவியையும் சுருதியுடன் கையாள முடியுமான வசதியும் வன்மையும் ஏற்படுகிறதென்றால், தனித்தியங்கும் தமிழையே ஆரம்பத்துக்குக் கற்றுக் கொண்டால் பிற பாஷைகளை அவசியமும் அவசரமும் ஏற்படும்போது எவ்வளவு எளிதில் கற்றுக் கொள்ள இயலும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் எவரும் ஒத்துக் கொள்ள வேண்டியதேயாகும்.

இவ்வசதியாவும், பிறர் பொறாமையும் அதிசயமும் கொள்ளும் அளவுக்கு ஒருங்கே அமையப் பெற்றிருந்தும், இதைச் சற்றேனும் அறியாது, சட்டை செய்யாது, இலக்கணமும் இலக்கியமும் ஒரு கடுகளவேனும் இல்லா ஒரு லம்பாடி பாஷையை, இந்தியை இத்தமிழ் நாட்டில் தமிழர்பேரில் அதுவும் சிட்டுக் குருவி தலையில் தேங்காயை யுடைத்தாற்போல் சிறுவர் பேரில் திணிப்பதென்பது தமிழைக் கெடுத்து, தமிழரின் நாகரீகத்தை பாழ்படுத்தி, தமிழ் நாட்டை வடநாட்டுக்கு அடிமைப்படுத்திக் கொடுக்கும் அரசியல் சூழ்ச்சியாகத்தானே இருக்க வேண்டும். இதற்காக ஒதுக்கப்படும் தொகையும் செலவழிக்கப்படும் தொகையும் வீண் விரயமென்றுதானே சொல்ல வேண்டும். இவ்விரயத்தையும் பயங்கரமிக்க சூழ்ச்சியையும், தமிழ் மக்கள் வெறுப்பதும் கண்டிப்பதும் எப்படி முறையில்லாத காரியமாகும்? அது அவர்கள் கடமையினும் முதற் கடமையென்றல்லவா சொல்ல வேண்டும். இதே இந்தியை பரப்புவதற்காக ஏற்படும் செலவினத் தொகைகளை இத்தமிழ் நாட்டில் தமிழை பரப்புவதற்கென செலவு செய்திருப்பின் தமிழ் எவ்வளவு பரவியிருக்க முடியும். தமிழரின் நிலை எவ்வளவு உயர்ந்திருக்கும்? அறிவும் ஆற்றலும் எவ்வளவு பெற்றிருப்பார். கையெழுத்திட கட்டை விரலை நீட்டி வரும் மானக்கேடான நிலை எவ்வளவு மாறியிருக்கும். என்பவைகளை இனியேனும் ஆட்சியாளர் தீர யோசித்து ஆவன செய்து இந்தியை அறவே ஒழித்து தமிழையே ஆதரித்து தமிழரின் அன்பையும் ஆதரவையும் அடைய வேண்டும் என எதிர் பார்க்கிறோம்.

மாலை நேரத்திலே, கடல் ஓரத்திலே

எங்கள் வீட்டுக்காரர் இருக்கச்சே, நாமந்தான் சாத்திட்டு வந்தா—நீங்கோ பார்த்திருக்கிறீளோ-பெருமாளாட்டுமே இருப்பர் நெற்றியிலும், கழுத்திலும், வயிற்றிலும், கையிலும், எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தாலும் உடம்பு அத்தனையும் வெள்ளையும் சிவப்புமா தெரியும். மாதத்லே நாமக் கட்டி மாத்திரம் ஒரு ரூபாயாகும். அவர் செத்த பின்னே அவராவது ஒருவரா இருந்தார். இப்போ அவன் (கடவுள்) பாக்கியத்தாலே பத்துப் பனிரெண்டு ஆண் குழந்தைகள் இருக்கிறார்கள். ஒரு காலணாவுக்கு ஒரு நாமக்கட்டி வாங்கிண்டு வந்து வருஷம் இரண்டாச்சி. அந்தக்கட்டி இது வரையும் தண்ணியே கண்டது கிடையாது. அந்தக் கட்டியின் ஓரமும் குறையல்லை. நுனியும் தேயில்லை. பிள்ளைகளுக்குக் கடவுள் டக்தியிலும் சம்பிரதாயத்திலும் கொஞ்சங்கூட அக்கரையில்லாமப் போச்சு. இல்லாட்டாலும் போகுதுண்ணா கோயில்களில்லே கொள்ளையடிக்கவல்ல புகுந்துட்டானுகள். ஆமா. கடவுள். இருந்தாத்தானே அவாளைக் கேக்கும். பிள்ளைகள் அப்படி இருந்தாலும் இந்தச் சூத்திரப் பையனுகளுக்குமாத்திரம் இடங் கொடுக்கப்படாதுன்னா. நம்ம பெரியவாளெல்லாம் இவனுகளை எவ்வளவு தந்திரத்திலே அடக்கி வைச்சிருந்தா. அவ்வளவும் வீணாப்போச்சே இந்த ஈரோட்டுக்காரனாலே.

ஆனால் இது கடசி கட்டம். மடங்களையும் மற்றதுகளையும் அடக்கப் பார்க்கரானுகளாமே. நம்ம ஜீவநாடியல்லவா அது.

மடமும் சத்திரமும் இவனுகோ காசும் பணமும் இல்லாட்டா நான் பிறந்த வீடும் பாழு. புகுந்த இடமும் பாழு. வெட்ட வெளிச்சமாவல்ல போயிடும். ஆனா... எனக்கென்னமோ வயிற்றுக்குள்ளே என்ன என்னமோ செய்யுது அப்படி என்ன பண்ணி விடப் போரானுகள் இந்த சூத்திரப் பையல்கள். நம்மவார்களெல்லாம் விட்டுடுவார்களா, என்ன.

"அலமு"

சிந்தனை

[மா. சு.]

—: ௐ :—

சீர்திருத்த மசோதாக்கள் சட்ட சபையிலே வரும்போது, இது தேர்தல் காலத்தில் சொல்லப்படவில்லையே" என்ற கூக்குரலை சிலர் எழுப்புகின்றனர்!

மந்திரிகள் சம்பளம் உயர்ந்ததும், கட்டாய இந்தி வந்ததும் உறுப்பினர்கள் படி அதிகமானதும் தேர்தல் கால வாக்குறுதிகளின் படிதானா?

அப்போது இந்த எம். எல். ஏக்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்? குறட்டை விடாமல் தூங்கிக் கொண்டிருந்தார்களோ? மடாதிபதிகள் பணத்தால் அடித்த அடி இவர்கள் உறக்கத்தை இப்போது கலைத்து விட்டிருக்குமோ?

"மன மாற்றம்"

(ப. மு. அப்துல் ரசீது)

"டேய்......? யாரங்கே...?

"எங்க, எஜமான்?

"அவன் வந்துட்டானு?

"யாருங்கோ...? சின்ன எஜமாங்களா?

"ஆமாம். அவனைத்தாண்டா!

"அவங்க இன்னும் ஆபீஸிலிருந்து வல்லீங்களே.

"அந்த பயல் வந்ததும், நான் மேலே இருக்கிறேன், வந்து பார்க்கச் சொல்லு.

"சரீங்க?

"யாரையா.........வெளிலே?

"எம்ப்பா...? நான் தான். கதவைத்திற?

கதவைத் திறந்தான் சோமு. அவன் திறந்த வேகத்தின் அதிர்ச்சி "என்ன' இவ்வளவு நேரமாக வெளியில் உனக்கு என்ன வேலை என்று கர்ஜிப்பதைப் போலிருந்தது. அச்சத்தின் அலைகளால் அலக்களிக்கப்பட்ட நான், "எம்ப்பா, சோமு அப்பா தூங்கிட்டாங்களோ? என்று கம்மிய குரலில் கேட்டேன்.

"இல்லீங்களே, நீங்கள் வந்ததும் மேலே வரச்சொல்லூண்ணு சொல்லிவிட்டு இப்போதானே போருங்க. நீங்கள் சீக்கிரமாய்ப் போங்கள். அப்புறம் என்னை— வேறே கோபிச்சுக்கப் போருங்க, என்ருன் சோமு.

அவன் உதட்டினின்றும் உதறிய சொற்கள், அப்பாவின் உள்ள நிலையை உணர்த்திற்று. எனக்கும் வயது 18 ஆகிறது. இதுகாறும் இத்தகைய வார்த்தைகளையே அவன் வாயினின்றும் எதிர்ப்பார்க்காத நான், தீயிலிட்ட புழுவைப்போல் துடிதுடித்து காரணம் கேட்டேன். அவன் வாய் திறந்தானில்லை. அவன் பேசாமலிருந்தது என்னுள்ளத்தை ஆயிரம் ஈட்டிகளைக்கொண்டு தாக்குவதைப் போல் உறுத்திற்று. உணர்ச்சியின் வேகத்தால் உருக்குலையப்பட்ட நான், அடிமேல் அடிவைத்து படிமீதேறினேன். அங்கு எழும்பிய ஒலி அலைகள் காற்ருேடு கலந்து கணீர், கணீரென்று என் செவிகளைத் தாக்கிற்று. "பரந்தாமா! பக்தவத்ஸலா! தீனதயாளா! கைலாச நாதா! அம்பிகை பாகா! வானோர் முதல்வா! என் கண்கண்ட தெய்வமே,, என்றெல்லாம் பாடி ஆண்டவனின் ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்தார், என் தந்தை. எங்கும் ஒரே அமைதி. என் காலடி ஓசை அப்பா, கருத்தின்மீது கொண்டிருந்த கருத்தைக் கலைத்தது. கண் திறந்தார். ஆ! என்ன கொடுமை நிறைந்த கண்? தீயினை சொரிந்து, என் பிறவியையே பொசிக்கிவிடும். அத்தகைய சக்திதான். அதற்கு எப்படி உண்டாயிற்று?

ஒருவேளை கைலாய நாதரே, அப்பாவின் ஓலத்தைக் கேட்டு இங்கு ஓடிவந்துவிட்டாரோ என்றெல்லாம் எண்ணினேன். அவராயிருந்தால் அரையிலேபுலித்தோல், நீண்ட சடை, அதிலே பாதி— வெண்பிறை, நெற்றியிலே திருநீறு. மார்பிலே உத்திராக்ஷ மாலை, தணல் போன்ற நிறம். இவையன்றி எப்பொழுதும் முடியிலிருந்து கசிந்து கொண்டிருக்கும் "கங்கை" வேறு. இவைகளில் திருநீற்றைத் தவிர இந்த சிவனுருக்கு வேறென்றையும் காணேமே!

ஒருவேளை அப்பா அழைத்த அவசரத்தில் அவையனைத்தையும் எடுப்பதற்கு மறந்து, ககனமார்க்கத்தில் கைலையிலிருந்து பறந்து வந்திருக்கிறுர் போலும்! பாவம்! ஆகா! இந்த சிவனுருக்கு அடியார்களிடத்தில் எத்தனை அன்பு? எவ்வளவு நம்பிக்கை? என்றெல்லாம் வாயார வாழ்த்திக் கொண்டிருந்தேன். என்ன வியப்பு! நான் இதுகாறும் கண்ணுல் கண்டது பொய்யா? இல்லை, என்னையே நான் ஏமாற்றிக் கொண்டேனு? ஒன்றுமே புரியவில்லையே! ஆண்டவனெங்கே? அப்பாவாக மாறிவிட்டாரா? என்ன அறியாமை! வந்தவர் சொல்லிக் கொள்ளாமலா போய்விடுவார்? அப்படியானுல் மக்களினத்திற்கே அருகதியற்றவரென்றல்லவா அந்த சிவனைச் சொல்ல வேண்டும்.

அப்பா என்னை ஒருமுறை உற்றுப்பார்த்தார். அவர் பார்வையில் அவரின் அகத்திலே மறைந்து நிற்கும் அனைத்தும் பிரதிபலித்தன. வெஞ்சினம் தவிழ்ந்து விழிகளும் சிவந்தன. பூஜையினின்றும் எழுந்தார். பிரசாதம் தருவாரென்று நினைத்தேன். ஆனுல், எதிர்பாராத விதமாக, "என்ன மைனர்வாள், ஆபீஸில் அலுவல்களெல்லாம் அதிகமோ? எண்டா ராஸ்க்கேல் எங்கே போய்விட்டு வருகிருய். குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே, துரோகி! என் கண் முன் நில்லாதே, மறியாதையாக இப்பொழுதே வீட்டைவிட்டுக் கிளம்பிவிடு. உன்னை பெற்ற கடமைக்கு படிக்க வைத்தாகிவிட்டது குலத்தின் கோத்திரத்தை குன்றின் மீதிட்ட விளக்கினை ஒப்ப மேம்பாட்டைச்செய்யும் மேதாவி என்றெல்லாம் எண்ணியதற்கு, அதைப் படுகுழியில் புதைக்கத் துணிந்தாயே, பாதகா! தன்னிகரில்லாதழைக்கும் புகழ் வாங்கும் தந்திரி! முற்றும் உணர்ந்து முழுவதும் முன்னேறும், சற்றும் பிசகாது சாதிக்கும் சாமர்த்தியசாலி என்றெல்லாம் பகல் கனவு கண்டு கொண்டிருந்தேனே! அதன் பலனு இது! உன்னுல் அடைந்த பலன் போதும். போ!......போடா? என்று சீறி விழுந்தார், சினத்திற்கு அடிமையான என் தந்தை ஆனுல் எனக்கு ஒன்றுமே பதில் சொல்லத் தோன்றவில்லை. ஒருவேலை நானும் வசந்தாவும் பூங்காவில் தன்னந்தனியாய்ப் பேசிக்கொண்டிருந்ததை யாரேனும் பார்த்து அப்பாவிடம் சொல்லி விட்டாரோ? அல்லது அப்பாவேதான் நேரில் பார்த்துவிட்டாரோ? என்றெல்லாம் பலவாறு நினைத்தேன் ஆனுல் என் அந்தராத்மா அதற்கு சம்மதிக்காமல் 'உன் சிற்றன்னையின் சிறு மதிக்கு அடிமைப்பட்டு சீறி விழுகிருர் உன தந்தை' என்று எனக்கு ஒரு மூலையிலிருந்து முனகியது. நான் இதற்கு உடன் பட்டவனுய் "அப்பா! நான் என்ன தவறு செய்தேன்! ஏன் இப்படி மூடு மந்தாமாய் பேசுகிறீர்கள்?" என்று குரல் நடுக்கத்தோடு கேட்டேன். அதற்கு வெகுமதி கண் கலங்க கன்னத்தில் ஒரு அறை. பொங்கி எழுந்த எனது உணர்ச்சிகள் என்னைப் பலவாறு தேற்றின. 'நீ தாயை இழந்த காரணத்தால் தடுமாறி நிற்கிருய்! ஆனுலும் பரவாயில்லை புறப்படு! வெற்றியை நோக்கி நட! வீறு கொண்டு எழு விவேகி என பெயரெடு. புரட்சி செய்! புதுவாழ்வை புகுத்து! கிளர்ச்சியைக்கிளப்பு! கீழ் நிலையை மாற்று! அதோபார்......! உன் வசந்தா! மாங்கல்யமிழந்த காரணத்தால் மணமிழந்த மலராகக் காணப்படுகிருள்! நாயகனை நழுவவிட்ட காரணத்தால் நானிலத்தில் நடைப்பிணமாக இருக்க வேண்டுமா? நீ உன் தந்தையின் சொகளைக் கேட்டு கிழான வாழ்விலே உழன்றுகொண்டு இருப்பதைக் காட்டிலும் அவளை ஏற்றுக் கொண்டு ஒரு புதிய வாழ்க்கையை சீர்திருத்த உலகம் சிறப்பித்து கூறும்படி செவ்வனே நடத்து! என்று என் அந்தராத்மா அவளிடம் இழுத்தது. இந்த எழுச்சிமிகு நிகழ்ச்சிகள் என் மனத்திரையில் மீண்டும் தோன்றவே, உணர்ச்சியின் வேகத்தால் உந்தப்பட்ட நான் "அப்பா! உண்மை உணர்ந்தேன். வசந்தா, ஒரு விதவைப் பெண், நான் அவளோடு நெருங்கிப்பழகுகிறேன் என்பதற்காகத் தானே! என்னை வீட்டினின்றும் வெளியேறச் சொல்லுகிறீர்கள்? இதோ! வெளியேறத்தயார்! ஆனுல் உங்களின் அறியாமையைப் பற்றி நினைக்கும்போது மாத்திரம் ஆத்திரம் பொங்குகிறது. முன்னேற்ற பாதையில் முனைய வொட்டாமல் எடுத்ததற்கெல்லாம் கடவுள் பெயரைச் சொல்லி அறிவை மட்டந்தட்டி, எத்திப்பிழைத்து வந்தார்களே ஒரு கூட்டம் அவர்கள் அழியும் காலம் எட்டியிருக்கிறது என்று இறுமாப்பு அடையாதீர்கள்! நெருங்கிவிட்டது. அப்பொழுதாவது உங்கள் மனம், மாற்றமடைகிறதா பார்ப்போம் என்று சொல்லிவிட்டு வெளிக்கிளம்பினேன். மணியும் ஒன்பது அடித்தது. அதை நல்ல சகுனம் என்று நவிலவும் வேண்டுமா?

விரைவாக நடந்து வசந்தா வீட்டின் வாயிலை அடைந்தேன். கதவு தாளிடப்பட்டிருந்தது. ஆனுல் அங்கு எழும்பிய வசந்தாவின் சோகக்குரல் காற்றையும் பிளந்து கதவின் சிறு துவாரத்தையும் கடந்து என் காதுகளில் தாக்கி, என் கவனத்தைக் கவர்ந்தது. கூர்ந்து கவனித்தேன் குணவதியின் சோகக்குரலில் தடுமாற்றமும் பின்னித்தவிழ்வதை. அந்தத் தடுமாற்றத்தின் நடுவே, "லோகமாதா! தாயே! என்னை எதற்காக நீ பெண்ணுகப் படைத்தாய்? பெண்ணுகப் படைத்தாயே பெற்ருேர்களைப் பார்க்கும் பாக்கியமளித்தாயா? போகட்டும். கொண்ட கனவனேடாகிலும் கூடிவாழ அவரை விட்டு வைத்தாயா? அவருக்கு மருந்தை ஊட்டி மயக்கத்தை மூட்டினுய்! ஆனுல் அவரை மயக்கத்தினின்றும் மீளும் மார்க்கத்தைக்கையாண்டாயா? இல்லை அதுதான் சமயமென்று உன் அகோர வாயின் கோரப்பற்களுக்கு இரையாக்கிக் கொண்டாய் அதோடு விட்டாயா? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வதைப்போல், நாக்கூசாமல் "இவள் சமூகத்தினின்றும் ஒதுக்கப்பட்டவள், 'விதவை' என்றெல்லாம் ஒரு சில உதவாக்கரைகள் என்னைப்பார்த்து உறுமவும், நான் அதை கேட்டுக் கொண்டிருக்கவும் ஆளாக்கினுயே! அடிகள்ளி! குடிகேடி! நீ ஒரு தெய்வமா? உனக்குத் தெய்வமென்ற பெயர் தான் தகுமா? என்றெல்லாம் புலம்பினுல் வசந்தா.

இனியும் என்னுல் பொருத்துக் கொண்டிருக்க முடியவில்லை. கதவைதட்டினேன். களிப்போடு சடிதில் திறந்து 'வருக' என்ருள் 'வந்

8-ம் பக்கம் பார்க்க.

டெலிபோன் : 86729

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரை கலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

இலக்கியமும் மக்களும்.

[தி' வ. அண்ணலே.]

எட்டைக் கெடுக்கும் கதைகளல்ல. உள்ளத்தைக் கள்ளமாக்கும் கற்பனைகளல்ல. ஆண் பெண் காம நாடகமல்ல. மிருக வெறியன் கள்ள நட்பை காதல் என வர்ணம் பூசி, உளச்சித்திரம் எனக் கூறும் சொல் ஜாலங்கள் அல்ல. மந்திர தந்திரங்கள் அல்ல! காகிதத்தைக் கறுப்பாக்கும் காளான்கள் தேவையில்லே. அறிவைக்களங்கமாக்கும் அளப்புகள் தேவையில்லே. சோர்வு நீங்காத சொக்கக் கனவுகள் வேண்டாம், பித்தலாட்டங்கள் தேவையில்லே! கற்ருேர் ஒரு சிலர். சிலரில் சிலரே எழுத முன் வந்திருக்கிருர்கள். மற்றவர் வயிற்றுப் பிழைப்புக்காக குமாஸ்தா வேலேயோ, ஆபிஸ் உத்தியோகமோ, கைத்தொழிலோ. எதுவோ பார்த்து, நாட்கள் பின் நாட்கள் கழியும் என்று வாழ்க்கை நடத்துகின்றனர்! மண்ணோடு மண்ணுகக் கிடப்போர் ஆயிரமாயிரம் மக்கள் உயிர் வாழவேண்டும் என்ற ஆசையால். இதர பயத்தைப் போக்குவதற்காக மூடக் கொள்கைகள், மத சம்பிரதாயங்கள் கடவுள் என்ற பெயரால், இன்னும் இதுகளேபோன்ற வற்றிலே. அர்த்தமற்ற, தெளிவற்ற நம்பிக்கை கொண்டு கிடக்கிருர்கள் பெரும்பாலோர்! வாழ்க்கை என்பது என்ன? வாழ்வின் தன்மை தான் என்ன? இன்பவாழ்வை எட்டிப்பெறலாம், என்பன போன்ற பல முக்கிய விஷயங்களே அறிய முடியாது இந்திரனுர், சிவனுர், பிற்பனுர் இவர்களின் உலகில் இன்பம் இருக்குதென்பார், என்று அல்லலுற்று கவலே வளர்த்து வாழ்வை மண்ணுக்குவோர் எண்ணற்றவர்கள்! உரிமையற்று உடலோய உழைத்துச் செத்துக்கொண்டிருப்பார்கள் கணக்கற்ருேர். சுரண்டலால் வஞ்சகத்தால். சூழ்ச்சியால் வாழ்வோர் கண்க்கிலர்—சிந்தனேயற்று சிந்திக்கத்தெரியாது பொட்டுப் பூச்சிகளாய் வாழ்ந்து மடியும் கூட்டம் பெரிது கவலேயற்று சுக வாழ்வை, இங்கேயே, அனுபவிக்கலாம் என்பதை உணரமுடியாது மிருகங்கள் போல் வாழ்வோர் எவ்வளவோ! சமூகத்திலே அறியாமைப் பேய் நடனம் புரிகிறது. அறியாமை முதலாம்—இழிதகமைகள் அனேத்தையும் வேரறுக்கவேண்டும். அதற்கு உரிய கருவி இலக்கியம் தான்!

மக்களேச் சிந்திக்கவைப்பதும். சிரிக்கச் செய்வதும். சீர்திருத்தத் தூண்டுவதும்;

அவர்கள் கவலேயை. அறியாமையை நீக்குவதும். வாழ்க்கையிலே பற்றுதல் ஏற்படுத்தவல்லதும். இன்பவாழ்வு காணத் தூண்டுவதும். மனிதராக வாழவைப்பதும்—எவ்வளவோ வலிமை பெற்றதும் இலக்கியம்தான்! இலக்கியம் சக்தி வாய்ந்தது. நாகரீகத்தின். ஜீவன் அது. கலாசாரத்தின் உயிர்ப்பு. மனித உயர்வின் சின்னம் அது. உயர்வுக்கு வழி காட்டும் பாதை அது. இலக்கியம் மொழியின் மூச்சு. உயிர்களின் சக்தி. ஒளி அது. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மந்திரம் அது. வாள் கொண்டு பகைமைகளே அறுத்தெறியலாம். துஷ்டப் பிராணிகளே ஒழிக்கலாம். தற்கொலேயும் செய்து கொள்ளலாம்! இலக்கியம் ஒரு வாள். அதுவே கேடயம். வலிவுள்ள கருவி. அது அமுதம். அதே நச்சாகவும் மாறும்! வாள் பயனுள்ள ஆயுதமாவதும் தற்கொலேக் கருவியாவதும் பற்றியுள்ளவன் கைவன்மையை, மனே வலிமையைப் பொறுத்தது—

இலக்கியம் அமுதமாவதும் நஞ்சாக மாறுவதும் பேனப் பிடிப்பவர் திறமையைப் பொறுத்தது. இன்று எழுத்தாளர்களில் பெரும்பாலோர் அமுதத்தை நச்சாக மாற்றும் திருப்பணியில் தான் ஈடுபட்டிருக்கிருர்ள்.

இலக்கியத்தின் மளிதப்பண்மை மறந்து விடுகிருர்கள். அல்லது ஒப்புக்கொள்ள மறுக்கிருர் கிருர்கள். அதேவேளேயில் இலக்கியம் தெய்வீகமானது என்று சொல்லி ஒரு சிலரின் தனி அறைகளுக்குள்ளே பதுக்கிவிட முன்வந்திருக்கிருர்கள்! அறிவு என்ன அவர்களின் வளப்புப் பயிரா என்று கேட்கிறேன் இலக்கியம் அவர்களது அப்பன் வீட்டுச் சொத்தா பதுக்கி வைத்துவிட்டு மற்றவர்களே முட்டாள்கள் என்று ஒதுக்கிவிட!

தமிழ் என்ன அவர்கள் சொந்த மொழியா. இலக்கியத்தை தங்கள் காதலியாகக் கருதி கற்புத் தன்மையும் அழியாமல் பாதுகாக்கிருேம் என்று அறியாமை அகந்தை கொள்வதற்கு எனக் கேட்கிறேன்.

தமிழ் தமிழரின் உயிர். நாட்டு மக்களின் மூச்சு. ஆகவே மொழியின் ஜீவனை இலக்கியம் மக்களின் சொத்து. உரிமையைச்சுரண்டுகிறவன், பறித்துப் பதுக்கிவிடத் தவிப்பவன் சுயநலத்துக்குப் பயன்படுத்த எண்ணுகிற எவனுமே துரோகிதான். மக்களின் துரோகி. அவன் மொழியின் கலேகாலன் அவன் நாட்டுப் பண்பாட்டைப் பாழ்படுத்தும் கறையான். அவன் உயர் குலத்துக்கு இழிவு தேடும் புல்லுருவி அவன்! உண்மை எழுத்தாளன் இப்படி இரான். அறிவு பெறவேண்டியது மக்களின் கடமை- சிறப்பாக உயிர்வாழ வேண்டியது அவர்கள் உரிமை. அதற்கு வழிகாணச் சிந்தனே செய்ய வேண்டியது அவர்கள் பொறுப்பு. அதற்கு அவர்களேத் தூண்டுவது இலக்கியத்தின் வேலே. தோழனுய் வழிகட்டியாய் சமுதாயத்தின் முன்னேடியாக வாழ வேண்டியவன் இலக்கியாசிரியன். அவன் லட்சியவாதி எவ்விதமான கொள்கையோ லட்சியமோ அற்று எழுதுகிறவன் வெளவால், அவன் இலக்கியாசிரியனகப் பெயர் பெற லாயக்கற்றவன். மனித குலத்துக்கு செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணித்த துரோசி அவன்! அவன் மக்கட் குலம் முன்னேற்றப் பாதையிலே தளர் நடைபோட்டுக் கொண்டிருக்கிறவன். தமிழினம் ஆர்வமாக முன்னேறத் தவித்து நிற்கிறது. தலே நிமிர்ந்து முன்செல்ல அவர்களுக்கு உற்சாகம் தேவை. வாழப் பிறந்தோம் என்று ஊக்குவிக்க வேண்டியது அவசியம். இவற்றைச் செய்ய வேண்டியவன் இலக்கியாசிரியன்! வாழ்க்கைப்பாதையிலே இன்னல்கள் மண்டிக்கிடக்கின்றன. சிறுமைகள் பெருத்து விட்டன. சூழ்ச்சிகள் பதுங்கியுள்ளன.

அர்த்தமற்ற பயமும் மூட நம்பிக்கைகளும் மல்கியுள்ளன. இவற்றை நீக்கி அறிவொளி பரப்ப வேண்டியது இலக்கியாசிரியன்! எழுத்தாளர்களாகி விடுவது யாவர்க்கும் எளிது. எழுத்துத் திறமையை இலக்கியமாக்க பண்பு பெறவேண்டும். குன்ருத ஆர்வமும் குறையாத தன்னம்பிக்கையும், தளராத ஊக்கமும், சலியாத மனே திடமும் சிறந்த லட்சியமும் வேண்டும். இலக்கியாசிரியனுக்கு விழிப்புற்ற சமுதாயத்தின் எக்காளம் அவன் உரிமை உணர்வு பெருகின்ற மக்களின் இதய ஒலி அவன் மக்களே செயலுக்கு தூண்டுகின்ற வீர முரசும் அவனே. உரிமை குரலேஇடியாக, மக்களின் உணர்ச்சியை எரிமலே நெருப்பாக மாற்ற வல்லவன் உண்மையான இலாக்கியாசிரியன் அவர்களிடையே அன்பும் அமைதியும் ஆனந்தமும் பரப்புகிறவன் அவன். மொழி அவன் துணே சொல்லுக்கு உயிர் கொடுப்பது அவன் திறமை இலக்கியம் அவன் கைக்கருவி. இனிய ஒலிதரும் வெய்ங் குழலாக இலங்கும். அதுவே சுட்டெரிக்கும் பிணமாகவும் வீசுகின்ற போர்வாளாகவும் தரித்து, அரித்து குறைகள் மீது கசப்பு ஏற்படுத்தும் ஆஸிட் ஆகவும் மாறும் வாளினும் வலியது பேனு. என்றது உண்மை இலக்கியாசிரியனின் திறமையை உணர்ந்த பேச்சு. பேனு முனேயை வருடினல் கிளுக்கச் செய்யும் சிறகு எனக் கருதும்படியாகவோ, இயக்க வல்லவன் இலக்கியாசிரியன். சொல்லின் செல்வன் அவன். சிந்திக்கத் தெரிந்தவன் அவன். சிந்திக்கச்செய்பவன் அவன். இத்தகைய இலக்கிய ஆசிரியர்கள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் இன்று அதிகம் தேவை. தேவை வளம்பெருகட்டும் அறிஞர்கள். வெல்க அவர்கள் எண்ணம்.

வாழ்க தமிழ்

வருகுவீர்!

கோவை. முத்துச்சோழன்.

முரசொலி! முரசொலி!! முரசொலி!/!

திராவிடத்தின் வீதிதோறும் வீடுதோறும் முரசொலி!
தலேநிமிர்ந்து தமிழர்வாழ வழிவகுக்க முரசொலி!!
உரமிழந்த தமிழருக்கு ஊக்கம்தற முரசொலி!!!
உலகமே வியக்குமாறு தமிழர்வாழ முரசொலி!!!
(முரசொலி)

பொருத்துப்பொருத்து வாழ்ந்தவாழ்வு போதுமிந்த நாட்டிலே
புலவர்களின் அட்டகாசம் நாளுதோறும் பரவுதே
இருந்திருந்து சிறுமைவாழ்வு எய்தகாலம் போதுமே
இறையைத் தேடும் சிறுத்தைபோல! எழுந்திருந்து வருகுவீர்! (முரசொலி)

மடமைஅச்சம் என்றபாகை உதரிவிட்டு வருதவீர்!
மமதைகொண்ட வடவர்களே துரத்திவிட வருதவீர்!!
அடிமை வாழ்வை தகர்த்தெரிய ஆர்வம் கொண்டு வருகுவீர்
ஆண்டநாட்டை இந்நாளில் ஆக்கம்தேட வருகுவீர்!!!
(முரசொ)

எவனெவனோ? அவனுக்கெல்லாம், தலேவணங்கி நிற்பதோ?
ஆண்டமக்கள் இந்த நாளில் அடிமையாக வாழ்வதோ?
உபப்புகொண்ட நமது நாட்டை "உலுத்தர்; வந்து. ஆள்வதோ?
உறுதிகொண்டு குருதிசிந்தி! நாட்டைமீட்போம் வருகுவீர் (முர)

நாட்டைமீட்க முரசு கொட்டி நாட்டம் கொண்டு வருகுவீர்
நாடெமதே! என்றுகூறி முரசொலியை கிளப்புவீர்!
பாட்டைப்பாடி யாதுபயன் அடைந்து நாளும் இல்லேயே.
பாழுபட்ட திராவிடத்தை பார்த்துகொண்டிருப்பதோ? (முர)

வீரம்கொண்டு பருந்துபோல விரைந்துவந்து சேருவீர்!
விழ்ச்சியுற்ற திராவிட்டதை மேலுயர்த்த வருகுவீர்!
தீரம்கொண்ட திராவிடரே!! திகைக்கவேண்டா வருகுவீ!!
துடிதுடித்து நமது நாட்டை மீட்கவந்து சேறுவீர் (முர!)

அன்று அழகாகக் கூறினுர் அழகேசன்

இன்று படம் பிடித்து காட்டுகிருர் பட்டாபி

[து. கணேசன்]

காங்கிரஸ் தலேவர் தேர்தலில் டான்டனுடன் போட்டி இட்ட டாக்டர் பட்டாபி வெற்றி பெற்ருர். பாபு தாண்டன் தோல்வியை அடைந்தார். இது மறுக்க மறைக்கமுடியாத உண்மை. வாசகர்கள் நன்ருக அறிவர். பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டதை கண்டிருப்பார்கள்.

தமிழ் திருநாட்டில் பட்டாபி பெற்ற ஓட்டுக்கள் ஆந்திரர்களேவிட அதிகம். இது அலங்காரவார்த்தை அல்ல! உள்ளத்திலே ஊதாரித்தனமும் உதட்டிலே உபசாரத்தன்மையும் பொருந்திய வார்த்தை கோர்வை அல்ல. பொய்கலவாத உண்மை. உள்ளத்தை உருக்கும் உண்மை மாசுமருவற்ற உண்மை. நடந்த நிகழ்ச்சி பகைப்பவர்களிடம் பகைமையை காட்டாது உதவி செய்யும் பண்பு மறத்தமிழரின் பிறவிக்குணம் என்பதையும், அவனியில் மறைந்த அண்ணல் காந்தி அடிகள் கூறிச்சென்ற அகிம்சையின் தத்துவத்தையும் அறநெறியையும் கடைபிடித்து சொல் அளவில் இல்லாது நடைமுறையில் நாட்டுக்கு காண்பித்து வரும் சித்திரம் என்பதையும் சொல்லாமலே விளங்கும்.

காங்கிரஸ் தலேமைப்பகுதி வடநாட்டாருக்கே அன்றி தென்னுட்டாருக்கும் உண்டு என்ற உரிமை முழக்கத்தை எடுத்துக்காட்டி விட்டது அந்திரரும். தமிழரும் பகைமையின்றி வாழ எழுந்த ஓர் இனச்சின்னமே பட்டாபியின் வெற்றிக்கு ஒரு மூல காரணம்.

அவர்தான்! அன்று வெற்றிமாலே சூடிய வேந்தர் பட்டாபிதான். 13-1-49 ல் சென்னேக்கு வந்தார். கால் நடையில் அல்ல, கப்பலேறி அல்ல விண்ணிலே பறக்கும் விமானத்திலே விரைந்தோடி வந்தார். அமோகமான வரவேற்பு. விமான நிலேயத்தில் மக்களின் தொகை அயிரக் கணக்கில் கூடி இருந்தனர். பெருத்த அரவாரம்

புதைந்து கிடந்த புதுமைக் கருத்துக்கள் பகுத்தறிவு ஒளி வீசுகின்ற காரணத்தினுல் சோபித மிக்க கதையோட்டத்தில், சுவைமிகுந்த உரையாடலில் மிளிர்கின்ற இந்நேரத்தில் பழமையை வெறுத்து புதுமை மலரும் இக்காலத்தில், அறிவின் சன்னதியின் முன் மக்கள் நின்று சங்கநாதம் முழங்கும் இந்நாளில், விடுதலேப் போரில் ஈடுபட்டு இன எழுச்சி. வளர்ச்சி வேண்டுமென வலியுறுத்தும் இத்தருணத்தில் பட்டாபியின் வருகை மிகச் சிறந்ததே.

மாலேகள் மார்பில் முத்தமிட்ட வண்ணமாயிருந்தன புன்னகைபூத்த முகத்துடனே வெறுப்போ அலுப்போ, சலுப்புமின்றி சாந்த முகத்தோடு பொறுமைப் பண்போடு அன்று அவர் காட்டிச்சென்ற புன்முறுவல் மக்களின் உள்ளத்தில் பிரியாதபாசமாக பிணேந்துவிட்டது.

திராவிடர் கழகத்தின் கொள்கை என்ருல் தீப்பொறி பறக்கும் கண்களுடன், உறுமிய உள்ளத்துடன் உற்று நோக்கும் தேசியத்தோழர்கள் கட்சியை மறந்து. பட்டாபி கூறின வார்த்தைகளே மனக்கண் முன் நிறுத்தி நெஞ்சில்கைவைத்து நீதியை கூறுவார்களா?

மொழி வட மாகாணப் பிரிவினே குறுகிய மனப்பித்து. அமைதியை குலேத்து அத்திரத்தை உண்டாக்கி, மலர்ந்திருக்கும் மக்கள் மனதில் நஞ்சைத் தடவி நாசமாக்கும் ஓர்ரசாக்கரின் கூட்டத்தலைவர்களின்செயல் இது அரசியல் வெறி அதிக்க வெறி இந்தியாவின் ஒற்றுமை கெடும், பாரத மாதாவை வெட்டுவதா துண் துண்டாக வெட்டி சித்ரவதைப்படுத்துவதா, வேண்டாம் இந்தச் சிறுமதி என்று சீறினர் பலர். சிலர் தங்கள் பொறுமையை இகம்பஅழதுாவடுத்ததோடு மாண்டஅடிமை மீண்டும்வளரும் ஆண்மை உயராது பிளவு ஏற்படும். பிணிபலஉண்டாகும் சண்டையும், சச்சரவும், சதாகாலமும் படை எடுத்த வண்ணமாயிருக்கும் என்று பசபசப்புவார்த்தைகளே, நீதிக்கு புறம்பான வார்த்தைகளே கூறி பாமரர்களின் உள்ளத்திலே ஊறிப் போயிருந்த பிரிவினேகிளர்ச்சியையும் அடக்கி, மடக்கி மட்டம்தட்ட முயன்றனர். ஆனல் இம்முறை நியாயமல்ல நீதி அல்ல, நெறி அல்ல அண்மை அல்ல ஒழுங்குஅல்ல என்று அழுத்தம் திருத்தமாக தயவு தாட்சண்யமின்றி, கனத்த குரலிலே கேளா காதினருக்கும் கேட்கும் வண்ணம், அன்றொரு ராள் மண்டபத்தில் அல்ல, மகேஸ்வரன் கோயிலில்அல்ல, ஆலமரத்தடியில் அல்ல அருடம் கூறும் இடத்திலுமல்ல அரசியல்நிர்ணயசபையில் கூறினுர். உச்சம் அச்சமின்றி ஒளிமறைவின்றி குழைவு நெளிவின்றி உள்ளத்தை உணரும் பாவனேயிலே உண்மையை எடுத்துரைத்தார் ஊராள வந்த உத்தமர்களுக்கு அதிக்க வெறி கூடாது இதனுல் ஒற்றுமை ஓங்காது வேற்றுமையும், விரோதமும் பெருகும் என்பதை உள்ளத்திலே தோய்ந்திருந்த உண்மைகளே உரிமையின் மூலம் கூறினுர் அழகேசன். தோழர் அழகேசன் திராவிட கழகத்தை சேர்ந்தவரல்ல அறிஞர் அண்ணுவின் நெருங்கிய நண்பரல்ல பழுத்த பழம் காங்கிரஸ் தியாகி அறும் பொறுப்பை ஏற்ற பெருந்தகையினர் மந்திரி பக்தவத்சலத்தின் பக்க நெருங்கிய உறவினர்காங்கிரஸ் இயக்கத்திலே பற்றுதல் கொண்ட ஒரு காளே.

ஆனல் முன்ஷியோ தமிழ்மொழி தாய்மொழி எனப் பேசி தனி உணர்ச்சியை கிளப்பிவிடும் தேசத் தலேவர்கள் காங்கிரசின் விரோதிகள் இவர்கள் மறைவில் திட்டிக்கொண்டு வரும் சதிச் சித்திரம். காங்கிரசின் மீதுள்ள பகைமையைபொருமையை மக்களின் பேரால் தாய்மொழியின் பேரில் திணித்து மக்களே மந்த மதியினர்களாக்கும் ஓர் மட்டரகப் பேர்வழிகள்என்று கடிந்துரைத்தார் தனி உணர்ச்சியை வளர்க்கவேண்டாம் வகுப்பு துவேஷம் இதனுல் மூளும் என்று கூறிமொதிபற்றுதலேஅன்பை இடித்து தரைமட்டமாக்குங்கள் என்று அதிக்க வெறிகொண்டு அவேசத்தோடு கூறினுர்.

இதோடு பிரிவினே நாடகம்முடிந்து விட்டது. என்று நினேத்திருந்தோம். மொழி வழி மாகாணப் பிரிவினே அர்த்தமற்றது. தேவை அற்றது அநீதமானதுவீண்எரிச்சலேமக்களின் மனதிலே எழுப்பக் கூடியது என்று ஆளவந்தவர்கள் கூறின வார்த்தைகளோடு வாளா இருந்தோம். ஆனல் இப்போதோ மீண்டும் புகைந்து விட்டது.

சுருங்கிய முகம் மலர்ந்தது கைத்த உள்ளம் களித்தது. மாண்ட இன்பம் மீண்டும் பிறந்தது, வாழ்க்கை வழி காட்டி வகுக்கப்பட்டது. மருண்ட உள்ளத்திலே மருட்சி மறைந்தது. சிறுமைகள், சீரழிவுகள் சிதறடிக்கப்பட்டன. பகுத்தறிவுக்கு பலமானதோர் கட்டிடம் கிடைத்தது. ஆதாரமற்ற அஸ்திவாரத்தில் தொங்கிக் கொண்டிருந்த உள்ளங்கள் அஸ்திவாரத்தின் அடிப்படையை கண்டு பிடித்து விட்டது. பெரியாரின் சிந்தனேகளும் சீர்திருத்த தேசியக் கருத்துகளும் சிதறி ஓடவில்லே அண்ணுவின் தமிழர் தம் உள்ளம் கவர்ந்த தளபதியின் ஆழ்மையான கருத்துக்கள் அகன்று செல்லவில்லே தொல்கலேப் பயின்ற கல்விக் கடல் கல்யாணசுந்தரனுர் அறிவு மிகுந்திடும் அவர் ஈரோட்டு மாநாட்டிவ ஆற்றிய உரை தமிழ் பெரு நாவலரின் உள்ள்த்தில் மட்டுமல்ல உரிமைப் போராட்டத்தில உதிரம் சிந்த காத்திருக்குப் வீரர்களின் விவேக எண்ணத்திலும் கலந்துவிட்டது தித்திக்கும் தீங்கனியாய், தெவிட்டாத தேனுய் மலர்ந்த மலராய்.

சுயநல சூது மொழியால் அல்ல மதப்பித்தத்தால் அல்ல அறியாதார்களின் பிதற்றினுலுமல்ல நீண்டநாள் சிந்தனேயின் விளேவால் ஆராய்ச்சியின் பயனுல் அனுபவத்தின்முடிவால்

8-ம் பக்கம் பார்க்க

"நவீனம்" வெளியீடுகள்

தோழர். என். பாலசுப்பிரமணியம் எழுதியவை

மணிவேலன்	...	...	1	8	0
ஜனக குமாரி	...	...	2	0	0
உதய சங்கரன்	...	...		0	0

தோழர் D. S. வேலன் எழுதியது

அமரேசன் (நாடகம்)	...	1	0	0

சாமி. சிதம்பரனுர் எழுதியது

அணேந்த விளக்கு (நாடகம்)	...	0	12	0

திரு. S. A. சுப்பராமன் எழுதியது

உடைந்த உள்ளம்	...	...	0	6	0

புத்தகம் வேண்டுவோர் முன் பணம் அனுப்பினுல் தபால் செலவின்றி புத்தகம் அனுப்பப்படும்.

மானேஜர் "நவீனம்" சென்னே—7

மக்கள் விரும்பும் ஆட்சி

பி. கமலநாதன்

மக்கள் விரும்பும் ஆட்சி மக்கள் கருத்தறிந்து மக்கள் முன்னேற்றத்திற்கும் மக்களின் பாமர தன்மையை போக்கவும், மக்களின் சமத்துவத்திற்கு வழிகோலும் மக்களின் இழிநிலேயைப் போக்கி உயர் நிலேக்கு கொண்டுவரும் உண்மை ஆட்சி. மத சார்பற்ற ஆட்சி சமரச சன்மார்க்க ஆட்சி. உயர்வு தாழ்வு என்னும் ஒழுங்கற்ற, அறிவற்ற. அறிவுக்கு ஒவ்வாத, ஆராய்ச்சிக்கு எட்டாத கற்பனே கதைகளே அகற்றி ஆண்டவன் படைப்பினில் அனேவரும் சமம் என்னும் அறிய தொண்டு செய்யும் அறிவாளிகள் ஆட்சி. சுக்ரீவனே ஏவி தன் உடன் பிறந்த சகோதரனை வாலியைக்கொல்லவும், விபீஷனனே தன்வயப்படுத்தி தம் காட்டிற்கே, ஏன்? தன் சகோதரனுக்கே துரோகம் செய்வித்த சூட்சிக்காரர்கள் ஆட்சியல்ல மக்கள் விரும்பும் ஆட்சி. பணக்காரர்கள் என்றும், பாமரர்களென்றும் இல்லாமல் குடிகளும் கோனுமிருந்த ஆட்சியை நயவஞ்சகத்தால், பார்ப்பனீய தந்திரத்தால் கடவுள் பார்ப்பன சந்யாசியாக வந்து யாசித்து மூன்று வரங் கேட்டு மாபலி சக்ரவர்த்தியை மண்ணுக்கடியில் மூடிய ஆட்சியல்ல மக்கள் விரும்பும் ஆட்சி. கபட சந்யாசம் பூண்டு தம் காரியத்தில் கண்ணுயிருக்க கங்கணம் கட்டி கங்காணி வேலே செய்யும் கயவர்கள் ஆட்சியல்ல மக்கள் விரும்பும் ஆட்சி. கடவுள் பேரால், மதத்தின் பேரால். மடத்தின் பேரால், வளர்க்கும் மடமையைப் போக்கி, மடாதிபதிகள் மத குருக்கள் ஜீயர்கள், சாமிஜிகள் குருக்கள் முதலானோர், தங்கள் லீலா விநோதங்களுக்கு தங்கள் உல்லாச வாழ்க்கைக்கு பயன்படுத்தி கொண்டுவரும் பொதுஜன சொத்துக்களே, சொத்துக்கும், சுதந்திரத்திற்கும் சுகபோக உரிமைக்கும் உரியவர்கள் என்று சொல்லும் உலுத்தர்கள் வாழ்க்கைக்கு, மிரட்டலுக்கு வீண் கூச்சலுக்கு வக்காலத்துக்கு அஞ்சாது ஆராய்ச்சிக்கு, அறிவு வளர்ச்சிக்கு கல்விக்கு, உண்மைக் கடவுள் தொண்டுக்கு உயரிய லட்சியத்திற்கு உத்தம சத்திய சாந்த சீலர் சொன்ன காந்திய தர்மத்திற்கு அடிகோலும் ஆட்சி மக்கள் விரும்பும் ஆட்சி. மதத்தைக் காப்பாற்ற ஒரு கும்பல், மடத்தைக் காப்பாற்ற ஒரு கும்பல் மட ஆதிக்கத்தை பாதுகாக்க ஒரு கும்பல் மதமும் மடங்களும் ஆதீனங்களும் இந்த ஒரு கும்பலுக்குத்தானு சொந்தம்? இதிகாச புராணப்படி ஆரியவர்க்கத்திற்குத்தானு இந்த ஆண்டவனும் அவரைச் சேர்ந்த மடங்களும் அதை நிர்வகிக்க அதிபதிகளும் வாரிசுகளும் இவர்கள் தானு? எத்தனே கோவில்களுக்கு எத்தனே மடங்களுக்கு எத்தனே சாமிகளுக்கு இந்த பார்ப்பனர்கள் ஆயிரக் கணக்கான லட்சக் கணக்கான பணங்களேயும் ஆயிரமாயிரம் ஏக்கர் நிலபுலன்களேயும் எழுதி வைத்துள்ளனர்? அவைகளே அநியாய அக்ரம அநியாய செய்கையில் விரயம் செய்கிறவர்கள் யார்? இவைகளே காப்பாற்ற பாடுபடுகிறவர்கள் யார்? என்று ஆராய்ந்து கடவுள் எங்கும் நிறைந்தவர். எல்லாருக்கும் பொதுவானவர், விருப்பு வெறுப்பற்றவர், கடவுளுக்கு யாரிடத்தும் வித்தியாசம் கிடையாது, கடவுள் எல்லாருடையவும் சொத்து, என்றும் அறநெறியைப் போதிக்கும் ஆட்சி மக்கள் விரும்பும் ஆட்சி. மதத்தையும் கடவுளேயும் மதத்தின் பேரால் கடவுளின் பேரால் கிடைக்கும் பணங்களேயும் மற்றும் நிலபுலன்

(8-ம் பக்கம் பார்க்க)

7-ம் பக்கம் தொடர்ச்சி.

களையும் காப்பாற்றும் பொறுப்பு இந்த ஆரியர்களுக்கு மாத்திரம் எப்படி ஏற்பட்டது? இவைகளை உண்ணு விரதமிருந்து காப்பாற்ற வேண்டிய அவசியமும் அக்கரையும் ஏற்பட்டதின் கருத்து என்ன? என்று பரந்த நோக்கத்துடன் ஆராய்ந்து அதன் அடிப்படையின் அஸ்திவாரத்தின் அந்தரங்கத்தில் கவனத்தை செலுத்தி மக்களுக்கு உண்மை விளக்கி நன்மை செய்யும் நல்லாட்சி மக்கள் விரும்பும் ஆட்சி. இந்து மதத்தின் இந்து தர்மத்தின் உயரிய ஒழுக்கங்கள் பல இருந்தும் பல அயிர வருஷங்களாய் நம் நாட்டில் பரவாததின். பரவ வைக்காததின் நோக்கம் என்ன? பிறநாடுகளிலிருந்து வந்த புத்த ஜைன கிறுத்துவ இஸ்லாமிய மதங்களுக்கு, இந்துக்களெனப்படுவோர் மதம் மாறியதின் காரணமென்ன? என்பதை சிந்தித்துபார்க்கும் சிந்தனையாளர்களின் ஆட்சி மக்கள் விரும்பும் ஆட்சி. 'அன்பே சிவம்' 'ஒருவனே தேவன்'' ஒன்றே குலம் ஜாதிமதபேதமெல்லாம் சண்டாளர் சூட்சி பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று போதித்த நம் நாட்டு வள்ளுவர் ராமலிங்கம் ஞானசம்பந்தர் தாயுமானுர் பதினெண் சித்தர்கள் போன்ற ஞானிகள் நவின்ற நல்லுரைகள் மக்களிடையே பரவாததற்கு காரணமென்ன? பலஜாதி பல கடவுள் பல மதங்கள் தீண்டப்படாதவன் படிக்கப்படாதவன் படித்தாலும் படிக்க பக்கம் நின்று கேட்டாலும் நாவறுக்கப்பட வேண்டிய ஒரு ஜாதி ஆண் முகத்தில் (பிரம்மா) பிறந்த ஒரு ஜாதி புஜத்தில் பிறந்த ஒரு ஜாதி துடையில் பிறந்த ஒரு ஜாதி அடியில் பிறந்த ஒரு ஜாதி. கடவுளுக்கு மனைவி மக்கள். வைப்பாட்டிகள் பேரன் பேத்திகள் அவர்களுக்கு தரகர்கள் தரகர்க்கு தரகர்கள் வசிக்க பல கோவில்கள் படுக்க பல கோவில்கள் லீலா விநோதங்கள் செய்ய பல இரகசிய அறைகள் உண்டென கற்பிக்கும் நூல்களை ஏடுகளை புராணங்களை இதிகாசங்களை தீயிட்டு கொளுத்தி அஹிம்சை சத்தியம் சன்மார்க்கம் சமரசம் நாடும் சன்மார்க்க அட்சி ஆற்றல் உள்ள ஆற்றும் திறமையுள்ள அறநெறியுள்ள அஞ்சா நெஞ்சுள்ளம் உள்ள ஆண்மையுள்ள ஆட்சி மக்கள் விரும்பும் ஆட்சி. பொதுமக்களின் சொத்து பொது தர்ம சொத்து பொது மக்களின் சேவைக்கு பொது பள்ளிகளுக்கு சிகிச்சைசாலைகளுக்கு கல்விக்கு நாட்டின் சீரமைப்புக்கு படுக்க பாயும் இருக்க இடமும் இன்றி பரதவிக்கும் பாமரருக்கு பயன்படுமாறு செய்யும் மக்கள் ஆட்சி பொது மக்கள் விரும்பும் ஆட்சி

7-ம் பக்கம் தொடர்ச்சி.

சொந்த மதியற்ற சூதுக்காரர்களும் சுயநல வேட்டைக்காரர்களுக்கும் 13-1-49-ல் பட்டாபி ஆந்திர மகா சபையில் படம்பிடித்து காட்டின புகைப்படம் தெளிவற்றதாகவும் காரமற்றதாகவும் சிந்தனைக்கும் செவிக்கும் ஏற்காததாகவும் தெரியும் என்பதில் என்ன விந்தை வேடிக்கை இருக்கிறது.

தனி மாகாணம் வேண்டுமென்கிற நமது கோரிக்கை அநேகமாக சித்தி பெறும் தருவாயி லிருக்கிறது. கமிட்டி கட்டத்திலிருந்தும் கமிஷன் கட்டத்திலிருந்தும் தாண்டி இப்போது மூவர் கமிட்டியிடம் முடிவுக்கு வந்திருக்கிறது. ''அதில் நானும் ஒருவன். எங்களில் இருவர் சம்மதித்து விட்டால் உடனே மொழிவழி பிரிவினை மாகாணங்களில் நிலை நிறுத்ததப்படும்'' என்று பட்டாபி கட்டமாக வீசி எரிந்த வீர உரையை பிரசுரித்த ஏடு சு. ம. ஏடல்ல, விடுதலை அல்ல ஆரிய ஏடு பாரத தேவியே, இது 13.1.49ல் தனது தேசிய தின இதழில் பிரசுரித்தது. ஆணவத்தை நெஞ்சிலே கொள்ளாமல் கொடுமை விஷத் தன்மையை காட்டாமல் தொல்லைகளின் மத்தியிலே உழன்று உழைத்து அலுத்துப்பேயிருக்கும் மக்களுக்கு கபட நெஞ்சத்தவர்களின் கைப்பாவையாக இராமல் உண்மையைப் பிரசுரித்ததற்கு பாரத தேவிக்கு என் நன்றி. அன்று அழகேசன் கூறின அழகான அரிய கருத்துக்களை, இன்று படம் பிடித்து காட்டினுர் பட்டாபி, பாட்டாளி மக்களுக்கும். சுதந்திர வேட்கை கொண்ட இளைஞர்களுக்கும் அளவில்லா. ஆனந்தத்தைக் கொடுக்ம் விதத்தில்.

வணக்கம்.

நெடுநாளாக சீர்திருத்த வாதிகளாலும் பகுத்தறிவு அறிஞர்களாலும் எதிர் பார்க்கப்பட்டு வருவதும் 25-2-49 ல் வெளிவர விருப்பதும் சிறந்த சமூகப்படமுமான "ஜுபிட"ரரின் "வேலைக்காரி" யில் "சுகிர்த"மாகவும் "அமிர்த"மாகவும் திறனுடன் நடித்திருக்கும் **எம். வி. இராஜம்மா.**

5-ம் பக்கம் தொடர்ச்சி.

தேன்' என்றேன். புலம்பி புண்பட்ட அவளின் முகம் என்னைக் கண்டதும் பூத்துக்குலுங்கும் பூங்காயாக மாறியது. ஆனல் அவளின் அகத்திலே அந்தகாரம் சூழ்ந்திருக்கக் கண்ட நான், "வசந்தா! நீ ஏன் நானிருக்கும் பொழுது கவலைப்படுகிருய்? சதிகார சமூகத்தின் பயங்கர மிரட்டலுக்கு அடிமைப்பட்டால் நம்மின் வாழ்க்கையே வரண்ட பாலைநிலமாகப் போய் விடும். அங்கே ஒற்றை நாடி படைத்தவர்களாகவும், நடைப் பிணங்களாகவும் ஒடித்திரியவேண்டும். அதன் நடுவே, தரகர்கள் போன்ற புராண மேந்திகளின் கூட்டமும், பிடாரிகள் போன்ற பழமை விரும்பிகளின் கூட்டமும் ஆனமட்டும் நம்மை வழி மறித்துக் கொள்ளையடிக்கும்.

அதோடல்லாமல் ஏமாறும் சமயத்தில் வட்டமிட்டு எத்திப் பிடுங்கும் கழுகு போன்ற கோயில் பெருச்சாளிகள் வேறு. வறண்ட பாலை நிலத்திலே வழி நடந்து வளமிக்க சோலையை காணுதற்கு இடையில் இத்தனை இடையூறுகளுக்கு நாம் ஆளாக வேண்டும். இவைகளையெல்லாம் நான் பொருட்படுத்த வில்லை. எதுவரினும் வரட்டும். இனி அஞ்சப்போவதில்லை. உன்னையன்றி வேறெவரையும் மணந்துக் கொள்ளப் போவதில்லை. இனிமேலாவது புராண மேந்திகளும், பழமை விரும்பிகளும் நம்மைப் பார்த்து திருந்தட்டும், புல்லேந்தும் கரம் 'தீ' பந்தம் ஏந்தட்டும் என்றெல்லாம் வசந்தாவிற்கு தேறுதல்கூறி ஆறுதல் அளித்தேன்'' மின்சார அதிர்ச்சி ஏற்பட்டவளைப்போல் துள்ளிக் குதித்தாள் வசந்தா. அப்புறம் கேட்க வேண்டுமா எங்களை. பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரிதான்.

வசந்தா வீட்டில் அவள் பாட்டியைத் தவிர வேறு ஒருவரும் கிடையாது. அவளருமைத்தாய் வசந்தா பிறந்த அன்றே இயற்கை எய்தி விட்டாள். முட்டையிலிருக்கும் குஞ்சுவை புட்டு வளர்ப்பதைப்போல் அன்று முதல் பராமரித்து கண்ணைப் பார்ப்பதற்காக குழந்தை வசந்தாவை தன் ஒரேகுமாரன் குமாரசாமிககு மணமுடித்து வைத்தாள் பாட்டி. காலமென்னும் கால தேவனின் பாசக் கயிற்றுல் கட்டுண்டான்குமாரசாமி வசந்தாவுக்கு விதவை என்னும் பட்டம் சூட்டப்பட்டது. பாவம்! ஒன்றும் அறியாதவள். குழந்தை வசந்தா குமரியானுள். கொம்பின்றி தவிக்கும் முல்லைக் கொடியைப் போல் துணைவனின்றி ஏங்கித் தவித்தாள் ஏந்திழை;

ஆண்டவனே பார்த்துத்தான் என்னை அவளிடம்இழுத்துச் சென், றிருக்க வேண்டும் அறிவு வந்த பிறகு ஆடவரின் ஆவியே அந்த வசந்தாவிற்கு, தனது முறுக்கேரிய காலத்தில் ஓர் அழகிய, அதுவும் அன்பு நிறைந்த என்னுடைய அணைப்பு அவளைப் பேதமில்லாமல் உறவு கொள்ளச் செய்ததோடு, மெய்மறக்கவும் செய்தது. என் மீது சாய்ந்தாள்! எங்கும் ஒரே அமைதி நாட்கள் மாதங்கள் ஆகி மாதங்கள் மணிக்கணக்கில் மாயமாய் மறைந்தன. ஆண்டின் முடிவு வசந்த காலம் அழகான ஆண் குழந்தை. அதுவும்....., வசந்தாவின் மடியிலா?!

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

சந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்
33, திருவேங்கிட முதலித் தெரு
பெரியமெட்டு. சென்னை. 3.

எல்லா ஊர்களிலும்
ஹிக்கின்பாதம்ஸ் ரைல்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

விடுதலை

1948ஆகஸ்டுமீ 10உ

இரவு 9-பணிக்கு தஞ்சை ஜில்லா கிசான்டிப்டி சூப்ரண்ட் சத்யவாஹேஸ்வர அய்யர் அவர்கள் தஞ்சைஜில்லா ஆதிதிராவிட பெடரேஷன் செயலாளரும் சீர்காழி தாலூக்கா பெடரேஷன் தலைவருமான K. K. S. மணியையும் P. சீனுவாச அவர்களையும் பெருந்தோட்டம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் அங்கு கைது செய்யப்பட்டு டையார்மீது 151, 107 செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டு மாயவரம் நாகைப்பட்ணம், R. D. O. கோர்ட்டுகளில் பிராசுகூஷன் தறப்பில் கிசான்டிப்டி சூப்ரெண்டு முதல் மிருசுதார்கள்வரை 33 சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டு8-2.49உபகல்12-மணிக்குபேரளம் கேம்பில் இருவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். பிராசிகூஷன் தரப்பில் தோழர் A. P. P. ஆல்பர்ட்டும் எதிரிகள் தரப்பில் மாயவரம் தோழர் K. லெக்ஷ்மிகாந்தம் அட்வகேட் அவர்களும் நாகைப்பட்ணம் T. மார்க்க சகாயம் M. A. B. L. அட்வகேட் அவர்களும் ஆஜராணுர்கள். (ஒ. நி.)

Edited and Published by B. Ranganatham. Mg. Editor R. Rajagopal 33Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the 'LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.